மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் : பதினாறு

Registered as a Newsp

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 22 புதன்கிழமை (08.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 315

# புலிகளை ஒடுக்க நடத்தும் போரை தமிழருக்கு எதிரானதாகப் பார்க்காதீர்!

## இந்தியாவின் கண்டனத்துக்கு போகொல்லாகம பதிலடி



கொழும்பு, ஒக்ரோபர் 08

விடுதலைப்புலிகளை ஒடுக்குவதற்காக நடத்தப்படும் போர் தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல. விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அல்லர் என்ற சரியான கண்ணோட்டத்தில் அதனைப் பார்க்க வேண்டும்.

இலங்கை மீதும், இங்கு வாழும் தமிழ் மக்கள் மீதும் "கரிசனையுள்ள" சகலரும் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம, இந்தியாவின் கவலை தெரிவிப்புக்கு நேற்றுப் பதிலடி கொடுத்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் மாணவர் நேற்று ஆர்ப்பாட்டம்

சென்னை, ஒக். 8

ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து தமிழகத்தில் பரவ லாக மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் நேற்று ஈடுபட்டனர். சேலம், விழுப்புரம் மாவட்டங்களில் மாணவர்கள் வகுப்புக்களைப் புறக்கணித்து போராட்டங்களை முன்னெடுத்தனர்.

மகிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவியை எரித்ததுடன் இலங்கை அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பினர் (அ-சி)

## கிளிநொச்சி படைநகர்வு முறியடிப்பு 20 சிப்பாய்கள் பலி; புலிகள் அறிவிப்பு

வவுனியா, ஒக். 08

கிளிநொச்சி நோக்கி நேற்றுக்காலை படையினர் மேற்கொண்ட முன்நகர்வினைத்தாம் முறியடித்திருக்கின்றனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

திருமுறிகண்டி அக்கராயன் வீதியில் இருந்து விடுதலைப் புலிகளின் முன்னரங்கப் பகுதிகளைக் கைப்பற்றும் நோக்கில் சரமாரியான ஷெல் தாக்குதல்கள் மற்றும் விமானப் படையின் எம்.ஐ.24 ரக ஹெலிகொப்டரின் தாக்குதல் உதவியுடன் படையினர் முன்நகர்வு நடவடிக்கையினை ஆரம்பித்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து புலிகள் தரப்பில் மேலும் (16ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் களமுனைத் தளபதிகளை விழிப்பாக இருக்குமாறு பொன்சேகா அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 8

வன்னியில் இராணுவ நடவடிக்கை தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதால் குடாநாட்டுக் களமுனைத் தளபதிகள் விழிப்பாக இருக்க வேண்டும் என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா யாழ். களமுனைத் தளபதிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்காக சில நடைமுறைகளையும், பணிப்புரைகளையும் தளபதி அவர்களுக்கு விடுத்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட இராணுவத் தளபதியை யாழ். மாவட்டத் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி பலாலியில் வரவேற்றார்.

அதன் பின்னர் களமுனைத் தளபதிகளை இராணுவத் தளபதி சந்தித்து குடா (16ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கையில் இனப் படுகொலையை தடுக்கக்கோரி பிரிட்டன் நாடாளுமன்றத்துக்கு முன்பாக புலம்பெயர்ந்த தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக்.08

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்துமாறு கோரி பிரிட்டன் நாடாளுமன்றத்துக்கு முன்பாக திங்கட்கிழமை புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் பெரும் ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர்.

பிரிட்டன் நாடாளுமன்றத்திற்கு முன்பாக மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி இரவு 7 மணி வரை இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்ட நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இலங்கை அரசால் தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்படும் கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சைத் தடுத்து நிறுத்துவதற்கு(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜானக பெரேரா கொலை விசாரணைக்காக சர்வதேச பொலிஸாரின் உதவியைப் பெறுக!

### அரசில் நம்பிக்கையில்லை என்கிறார் ரணில்

கொழும்பு, ஒக். 08

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்த அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச பொலிஸாரின் உதவியைப் பெறவேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசிடம் நேற்று (16ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் கிளைமோர் தாக்குதல் 3 பொதுமக்கள் பலி; 6 பேர் காயம்

### ஆழ ஊடுருவும் அணி கைவரிசை?

கிளிநொச்சி, ஒக். 08

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள, புளியங்குளம் - புதுக்குடியிருப்பு வீதியில் பயணிகள் பஸ்ஸை இலக்குவைத்து நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் மூவர் (16ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் எம்.பியானார் கருணா அமைச்சர்கள் வாழ்த்து மழை!

### டக்ளஸ் கட்டியணைத்து முத்தம்

அரச தரப்பின் அமோக வரவேற்பின் மத்தியிலும் எதிர்க் கட்சிகளின் பகிஷ்கரிப்பின் மத்தியிலும் நேற்று விநாயக மூர்த்தி முரளிதரன் (கருணா) எம்.பியாக நாடாளுமன்றில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட பல அமைச்சர்கள் கருணாவை கட்டியணைத்து(16ஆம் பக்கம் பார்க்க)

## போரினால் மக்கள் பாதிக்கப்படுவதை தடுக்குமாறு ஆஸியும் அரசுக்கு அழுத்தம்

கொழும்பு, ஒக்டோபர் 08

இலங்கையில் தொடரும் இராணுவ நடவடிக்கைகளின் போது பொதுமக்களுக்கு உயிரிழப்புகள் மற்றும் பாதிப்புகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு இலங்கை அரசை ஆஸ்திரேலியா வலியுறுத்திக் கேட்டுள்ளது.

• இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு ஏற்படும் மனிதாபிமானஅவலங்களுக்குத் தீர்வுகாண்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் ஆஸ்திரேலியா கேட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் வெளியிட்ட அறிக்கையொன்றில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஒக். 08

வி.முரளிதரன் எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி. நேற்றைய நாடாளுமன்ற அமர்வைப் பகிஷ்கரித்தது. (16ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் நீடிப்பு

கொழும்பு, ஒக். 08

அவசரகாலச் சட்டம் 84 மேலதிக வாக்குகளால் மேலும் ஒருமாதத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. அவசரகால சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணையை பிரதமர் ரட்ணசிறி (16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள அரசின் இனப்படுகொலை தொடர்ந்தால் தமிழகம் இனியும் கைகட்டிப் பார்த்துக்கொண்டு இருக்காது!

சென்னை, ஒக்.8

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை தொடர்பான கோரிக்கைகளை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கால் நிறைவேற்ற முடியாமல் போய்- இலங்கை அரசானது தொடர்ந்தும் கச்சைகட்டிக் கொண்டு போரை நடத்தினால் நாங்கள் கையைக்கட்டிக் கொண்டு சும்மா இருக்க முடியாது - என்று தமிழ் நாடு முதல்வர் கருணாநிதி கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தி.மு.க. நிலை தொடர்பான கொள்கை விளக்கப் பொதுக் கூட்டத்தில் தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதல்வருமான கருணாநிதி பேசியவை வருமாறு:

நீண்ட காலத்திற்கு பிறகு இலங்கைப் பிரச்சினை குறித்து பேசவேண்டிய - செயற்பட வேண்டிய - உறுதி எடுக்க வேண்டிய - ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த சூழ்நிலையை எந்தக் கோணங்களில் அணுகப்போகிறோம், அணுக இருக்கிறோம் என்ற நிலைகளை கடந்த இரண்டு நாள்களாக தலைமைக் கழகத்தின் சார்பில் நானும், பொதுச்செயலாளரும், கழக முன்னோடிகளும் அறிவாலயத்தில் அமர்ந்து சிந்தித்து அதனடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுதான் இந்த கூட்டம்.

இந்த கூட்டத்திற்கான விளம்பரங்கள் செய்யப்பட்டு, உங்களை எல்லாம் சந்திப்பதற்கு முன்பு எதற்கும் மத்திய அரசோடு ஒரு வார்த்தை பேசிவிட்டு, நம்முடைய முடிவுகளை எடுக்கலாம் என்று கருதி மத்திய அரசுக்கு நம்முடைய நிலையை விளக்கி நாம் தமிழகத்திலே எத்தகைய தாங்கொணாத் துயரத்திற்கு ஆளாகியிருக்கிறோம் என்பதை எடுத்துச்சொல்லி, அவர்களுக்கு விளக்கம் அளித்து இதற்கு தக்கதோர் வழி காண வேண்டும். தமிழர்களை இலங்கைத் தீவில் காப்பாற்றியாக வேண்டும் என்ற அபயக்குரலை இங்கே எழுப்புவதற்காக கூடியிருக்கிறோம்.

இன்றைக்கு போராட்டத்தை அறிவிக்கப்போகிறோம் என்று யாரும் கருத வேண்டாம். நமது ஆசைகள் நிராசைகளாகுமேயானால், நமது எதிர்பார்ப்பு நமக்கு ஏமாற்றத்தை தருமேயானால், அதைப்பற்றி நாம் ஆலோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை தவிர்த்திட நான் விரும்பவில்லை.

ஏனென்றால் இருப்பது ஒரு உயிர். அது போகப்போவது ஒருமுறை. அது நல்ல காரியத்திற்காக போகட்டுமே என்கின்ற பழமொழி இன்றைக்கெல்லாம் கேட்டுக் கேட்டு பழக்கமான ஒரு மொழி. அது கேட்டுக்கேட்டுப் பழக்கமாக இருந்தது மட்டும் போதாது. செயற்பட்ட மொழியாகவும் மாறிடும் ஒருநிலையை உருவாக்குவதற்கு இலங்கை அரசும், இலங்கை அரசுக்கு ஏதோ ஒரு வகையில் தங்களையும் அறியாமல் ஏமாற்றப்பட்டு இந்தியப் பேரரசு துணையாக மாறி வருவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை அறிவிப்பதற்காகத்தான் இந்த கூட்டம்.

1956 ஆம் ஆண்டிலேயே இலங்கை பிரச்சினைக்கான குரல் தமிழகத்தில் இருந்தது. அந்த பிரச்சினைக்காக எடுக்கப்பட்ட தீர்மானத்தையும், அன்று சிதம்பரத்தில் 1956ஆம் ஆண்டு, ஜனவரி முதலாம் திகதியன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக் குழுக் கூட்டத்தில் நான் தான் முன்மொழிந்தேன். கழகத்தின் மூத்த தலைவர்களுள் ஒரு வரான பொன்னம்பலனார் அதை வழி மொழிந்தார்.

**ஈழத்தமிழர் இன்னலைப் போக்கவே இங்கு கூடியிருக்கிறோம்**

எனவே நேற்று பெய்த மழையில் இன்றைக்கு முளைத்த காளான்கள் சில பேர் இந்தப் பிரச்சினையை எழுப்பிக்கொண்டு கூச்சலிடுகிறார்கள் என்று யாரும் சொல்ல முடியாது. என்றைக்கு இலங்கையில் இந்த பிரச்சினை உருவாயிற்றோ, அன்றைக்கே இந்த பிரச்சினைக்கு தக்கதோர் வழிகண்டு தமிழர்களின் உரிமைகளைக் காப்பாற்ற, தமிழர்களை யாரும் களங்கப்படுத்தாமல் இருக்க, தமிழுக்கு உரிய இடத்தை இலங்கை அரசிலே பெற அன்றைக்கே போர் முழக்கம் ஆரம்பமாயிற்று.

தமிழகத்தில் வாழ்கின்ற தாய்த்தமிழகத்து தமிழர்கள் அனைவரும் இலங்கை வாழ் தமிழர்களின் இன்னலை போக்க நமது சகல ஆதரவையும் அளிக்கத்தான் இங்கே கூடியிருக்கிறோம் என்பதை மறக்கக்கூடாது. இதை ஒட்டுமொத்தமாக ஒரு தீர்மானமாக ஆக்கி நேற்றைய நாள் (அதாவது கடந்த ஞாயிறன்று) பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும், இந்திய அரசை நடத்துகின்ற தலைவர்களுக்கும், சோனியா காந்திக்கும் அனுப்பிவைத்தோம்.

அந்த தீர்மானத்திற்கு பலன் இல்லாமல் போகவில்லை. இன்று (அதாவது கடந்த திங்கட்கிழமை) முற்பகல் 10:00 மணியளவில் மத்திய மந்திரி டி.ஆர்.பாலுவை பிரதமர் மன்மோகன்சிங் அழைத்து அவரிடத்தில் பேசி, நிலவரங்களைக் கேட்டறிந்து, எனது கடிதத்திற்கு, எனது வேண்டுகோளுக்கு உடனடியாக பதில் அளிக்கிறேன் - என்று சொல்லி தொலைபேசி மூலமாக என்னை தொடர்பு கொண்டு பேசினார். இருக்கும் விவரங்களை எல்லாம் நான் விவரித்து சொன்னேன்.

எப்படி எல்லாம் கொடுமைப்படுத்தப் படுகிறார்கள். இந்தியாவின் தலையீடு இருந்தும் கூட அப்படி இருப்பதாகவே அவர்கள் எண்ணவில்லை. அதை அலட்சியப்படுத்திவிட்டு நடக்கிறார்கள். தினம் தினம் எங்கள் செவிகளிலே விழுகின்ற செய்திகள் எங்களை கலங்கடித்துக் கொண்டிருக்கிறது. எங்களால் தமிழகத்தில் தொடர்ந்து இனி வாழ முடியுமா? என்று எங்களுக்குத் தெரியவில்லை. நாள்தோறும் செத்துக்கொண்டு இருக்கிறோம் என்பதை நான் மன்மோகன் சிங்கிடம் சொன்னேன். அவர்கள் கவலைப்பட வேண்டாம். நான் உறுதியாகச் சொல்கிறேன், என்னை நம்புங்கள் - என்று இந்தியப் பிரதமர் எனக்கு வாக்களித்தார். வாக்களித்த உடனே தான் நான் அவரிடம் எங்களுடைய கோரிக்கைகளை நீங்கள் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னேன்.

என்ன கோரிக்கைகள் - என்று கேட்டார். ஒவ்வொரு கோரிக்கையாக நான் படித்துக்காட்டினேன்.

* புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவரை மத்திய அரசு உடனடியாக அழைத்து நிராயுதபாணியாக உள்ள இலங்கைத் தோழர்களைக் கொல்வது குறித்து இந்தியா தனது கண்டனத்தை தெரிவிக்க வேண்டும்.
* இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கையும், இனப்படுகொலையும் உடன்டியாக முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.
* இலங்கை அரசு அமைதிப் பேச்சுக்களைத் தொடங்கிட வேண்டும்.
* இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் எத்தகைய துன்பத்திற்கும் இனி ஆளாகவே கூடாது.

இவைகளையெல்லாம் எடுத்துக்கூறிய போது, மிகுந்த அக்கறையுடனும், கவலையுடனும் தழுதழுத்த குரலில் பிரதமர் மன்மோகன் சிங் ஏற்றுக்கொண்டு, நான் உடனடியாக கவனிக்கிறேன், என்னை நம்புங்கள் என்று அவர் கூறிய வார்த்தைகள் எனக்கு ஆறுதலாக இருந்தன, எனக்கு நம்பிக்கை ஊட்டியவைகளாகவும் இருந்தன.

ஒருவேளை அவராலே நிறைவேற்றப்பட முடியாமல் போகுமேயானால் நான் அவரையும் துணைக்கு அழைக்கிறேன், நம்முடைய இனத்தமிழர்களை ஒழித்துத்தான் தீருவோம் என்ற இலங்கை கச்சை கட்டிக்கொண்டு இந்தப் போரிலே ஈடுபடுமேயானால் தமிழர்கள் கைகட்டிக்கொண்டு இருக்கமுடியாது. அப்படி ஒரு நிலை ஏற்படும் போது இந்திய அரசு நீங்கள் எங்களுக்கு துணையாக இருக்க வேண்டும் என்று இந்த கூட்டத்தின் வாயிலாக பிரதமருக்கு எடுத்துக் கூறுகிறேன்.

ஆனால் அவர்கள் என்னிடத்தில் உறுதியளித்தது மாத்திரமல்ல, உடனடியாக இந்தியப் பாதுகாப்பு ஆலோசகரை அழைத்து அவர் மூலமாக டில்லியில் உள்ள இலங்கைத் தூதுவரை வரச்சொல்லி அவரை எச்சரித்து இப்படி தமிழகத்தில் இருந்து அபயக்குரல் வந்திருக்கிறது; கண்டனக் குரல் வந்திருக்கிறது, தி.மு.க. எதிர்ப்பை சுட்டிக்காட்டியுள்ளது; தமிழர்கள் தங்கள் கவலையை தெரிவித்திருக்கிறார்கள். நீங்கள் எங்கள் துயரத்தை அறிந்து ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும் என்ற எச்சரிக்கையை இந்திய அரசு அவர்களுக்கு செய்துள்ளது என்ற செய்தி மகிழ்ச்சியானது.

**[illegible]**

இது மீறப்பட்டால் அதற்கு பிறகு நாங்கள் இந்த அரசு (தி.மு.க. அரசு) எங்களுக்குத் தேவையா - என்கின்ற அந்த கேள்விக்கு விடை கண்டாக வேண்டும் என்பதை பவ்வியமாக, - அடக்கமாக - அமைதியாக - அதே நேரத்திலே நான் தமிழன், தமிழ் நாட்டு மக்களை ஆண்டு கொண்டிருக்கும் ஒரு தமிழன், தமிழ்நாட்டு மக்களுக்கு எல்லாம் காவலாக நியமிக்கப்பட்ட ஒருகாவலன். அந்தத் தமிழன் இங்கே செத்தால் என்ன? இலங்கையிலே செத்தால் என்ன? எங்கே செத்தாலும் அவன் தமிழன் தமிழன் தான். எனவே அந்த தமிழனைக் காப்பாற்ற நாங்கள் நடத்துகின்ற போராட்டத்தில் "இந்திய அரசே எங்களைக் கைவிட்டு விடாதீர்கள்" - என்று கேட்கத்தான் இந்த கூட்டம்.

இலங்கையில் காந்தியடிகளைப் போன்ற உருவம், ஆனால் பெரியாரைப் போன்ற உள்ளம் கொண்ட செல்வா தொடங்கியதுதான் உரிமைப் போராட்டம். அதற்கான ஆதரவு கேட்டு அவர் தமிழகத்திற்கு வந்தார். இங்கு வந்த போது அவரோடு அமிர்தலிங்கமும் வந்திருந்தார்.

## இலங்கைத் தமிழர்கள் மாத்திரமல்ல இங்குள்ள தமிழர்களும் அடியோடு சாவோம்

இவர்கள் எல்லாம் இன்று இல்லை. இவர்கள் இல்லாமல் போனதற்கான காரணங்களை நான் ஆராய விரும்பவும் இல்லை. அதற்காக இப்போது கண்ணீர் விட்டு புண்ணியமும் இல்லை. செல்வா காலத்திற்கு பிறகு அங்கு இளைஞர்கள் தோன்றினார்கள். அந்த இளைஞர்கள் தான் சிறைச்சாலையிலே உயிர் நீத்தார்கள். அப்படிப்பட்டவர்களுடைய தியாகம் அவர்கள் நினைத்த விடுதலை உணர்வு இன்றளவும் பட்டுப்போகாமல் இலங்கையில் இருக்கிறது.

ஆனால் முழு விடுதலைதான் வேண்டுமா? இலங்கையில் இருந்து தனி ஈழம் பிரிந்துதான் தீர வேண்டுமா? இது விவாதத்திற்குரிய விடயம். நெடுநாளாக விவாதிக்கப்படுகிறது. இதற்கிடையில் எத்தனையோ சமாதானக் குழுக்கள் வந்துள்ளன. நோர்வே உள்ளிட்ட பல நாடுகள், அறிவாளிகள், சமரசத் தூதுவர்கள், சமரசம் செய்ய வந்த நாடுகள் என அத்தனை பேரும் முயற்சித்தும் கூட அங்கே இன்னும் சமரசம் ஏற்படவில்லை. ஒருவேளை, தமிழனின் இரத்தம் முழுவதும் இலங்கைத் தீவிலே அபிசேகிக்கப்பட்டால்தான் - அதற்கு பிறகுதான் சமரசம் வரும் என்ற செடி இலங்கையிலே முளைக்குமோ என்னவோ, எனக்குத் தெரியவில்லை.

**இலங்கையில் தமிழர்களின் உரிமைப் பூ பூக்க வேண்டும்**

அத்தகைய இரத்த அபிசேகம் நடைபெறாமலேயே அங்கே புரட்சிப்பூ, புதுமைப்பூ, ஜனநாயகப்பூ, விடுதலைப்பூ, மறுமலர்ச்சிப்பூ, உரிமைப்பூ தமிழர்களின் வாழ்வுப்பூ அங்கே பூக்க வேண்டும் என்பதுதான் எனது ஆசை. தி.மு.க.வின் கருத்துமாகும். அந்தக் கருத்தை வெற்றி பெறச் செய்ய இந்தியாவிலே இருக்கின்ற தலைவர்கள், தமிழகத்தில் இருக்கின்ற தலைவர்கள் எல்லாம் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளத்தான் இந்த பொதுக் கூட்டத்தில் வேண்டுகோளாக விடுக்கிறேன்.

இந்த ஒரு விடயத்திலாவது சாகிற தமிழனைக் காப்பாற்றுகின்ற விடயத்திலாவது, நாம் எல்லோரும் ஒன்றுபட்டு இருப்போம். நமக்குள்ளே சச்சரவுகள் தேவையில்லை. நாம் ஒன்றுபட்ட நிலையிலே இந்த பிரச்சினையை அணுகுவோம். எந்த கசப்புகளும், எந்த மன வேறுபாடுகளும் இல்லாமல் அனை வரும் ஒத்துழைக்க வேண்டும்.

''உள்ளத்தால் ஒருவரே, வெள்ளம் போல் தமிழர் கூட்டம்...'' என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவி வரிகள் நிறைவேறும் நாளை நான் எதிர்பார்க்கிறேன். அந்த நாள் உருவாக வேண்டும் என்று தான் நான் தவம் இருக்கி றேன். அந்தத் தவம் பலிக்க வேண்டும். அது இதுவரையிலும் பலிக் காவிட்டாலும் கூட, ஈழத்தமிழர் பிரச்சினையிலாவது அந்தத்தவம் பலித்து அனைவரும் தமிழர்கள் தான், தமிழர்களுக்கு ஒரு தீங்கு வந்தால் எல்லா ரும் கேடயங் களாக இருந்து அந்த தீங்கை தாக்குவோம். அந்த பகையை வெல்லுவோம் - என்ற உறுதி மொழியை எடுத்துக்கொள்ள வேண்டும்.



இன்றைக்கு உல கம் முழுவதும் இருக்கும் தமிழர்கள் ஒரே உணர் வோடு இந்த பிரச் சினையை நோக்குகிறார்கள் என்ற மன ஆறுதல் ஏற் பட்டுள்ளது. நேற்று (அதாவது கடந்த ஞாயிறன்று) நான் அந்த செய்தி[illegible] வெளியிட் டவுடன் இங்கிலாந்து நாட்டின் நாடாளு மன்ற உறுப் பினர் வீரேந்திர சர்மான், இந்த செய்தியைப் பார்த்து விட்டு எனக்கு கடிதம் எழுதியுள்ளார். வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும் எனக்கு கடிதம் எழுதியுள்ளது. இலங் கையின் நாடாளு மன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும் எனக் குக் கடிதம் எழுதியுள்ளார்.

வெளிநாட்டில் இருக்கின்ற தமிழ் சமுதாயத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடிதம் எழுதி என்னை துணை நில்லுங்கள் என்று சொல்கிறார்கள் என்றால் அந்த என்னை என்பதற்கு கருணாநிதி மட்டுமல்ல தமிழ் சமுதாயத்தை, தமிழர்களை தமிழகத்தில் உள்ள பல்வேறு கட்சித் தலைவர்களை, தமிழர்களுக்காக இயக்கம் நடத்துகின்ற அனைவரையும் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

தனி ஒருவனாக நின்று இந்த காரியத்தை சாதிக்க முடியும் என்று நான் சொன்[illegible] என்னை விட இறுமாப்பு உள்ளவன் யா[illegible] இருக்கமுடியாது. ஆகவே தமிழர்கள் அனைவரும் ஒரே உருவில், ஒரே வடிவில், ஒரே உணர்வில் நின்று இந்த ஆபத்துக்கு விடை காண்போம். இந்திய அரசு ஒத்துழைக்கும் என்று நம்புவோம். நம்பினால் நாம் வெற்றிபெறுவோம். அவர்கள் ஒத்துழைத்தால் நமக்கு வாழ்வு உண்டு. ஒத்துழைக்காவிட்டால் இலங்கைத் தமிழர்கள் மாத்திரமல்ல, இங்குள்ள தமிழர்களும் அடியோடு சாவோம். இதைத்தவிர வேறு எதையும் சொல்ல விரும்பவில்லை.

இந்தக் கூட்டத்தோடு இந்த போராட்டம் முடிவதல்ல. நமது குரல் இத்தோடு நிற்பதல்ல. வேறு வழி யோசிப்போம். பொதுக் குழுவில் இது பற்றி யோசித்து முடிவு எடுப்போம். அதற்கு வழியில்லாமல் இளகிய மனம் படைத்த பிரதமரும், அதைவிட இளகிய மனம்படைத்த சோனியாகாந்தியும் இலங்கைத் தமிழர்கள் மீது காட்டுகின்ற கருணையை - அன்பை - பாசத்தை - மனிதநேயத்தை - இலங்கைத் தமிழர்களுக்கும் மட்டுமல்ல உலகமெங்கும் உள்ள மனிதர்களிடம் காட்டவேண்டிய மனிதநேயத்தை இலங்கைத் தமிழர்கள் மீதும் காட்டுவார்கள் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகிறேன் - என்றார். (அ-சி)

---


### தென்மராட்சி மே. ப.நோ.கூ. சங்கம் வ-து

## முக்கிய அறிவித்தல்

கிளைக்குழு உறுப்பினர் தெரிவுக்கான பூரணமான அறிவித்தல் இன்று (08.10.2008) புதன்கிழமை இப் பத்திரிகையில் 4 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. கிளைகள் ரீதியாக தனித்தனி கிளைப் பொதுக்கூட்ட அறிவித்தல் கிடைக்கப் பெறாத வாக்காளர்கள் பத்திரிகையில் வெளிவந்துள்ள அறிவித்தலை ஏற்றுக்கொண்டு குறிப்பிட்ட திகதியில் கிளைகளில் நடைபெறும் கிளைப்பொதுச் சபை கூட்டத்துக்கு தவறாது சமூகமளிக்கும்படி தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்

செயலாளர்,
தெ.மே.ப.நோ.கூ.சங்கம்,
கைதடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி வலயங்களின் புள்ளி விவரங்களை கணனி மூலம் ஆவணப்படுத்துமாறு பணிப்பு

## கல்விப் பணிப்பாளர்களுக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவுறுத்து

அச்சுவேலி, ஒக்.8

காலத்துக்குக் காலம் கல்வி அலுவலகங்களால் குறிப்பிட்ட தேவைகளின் நிமித்தம் தொகுக்கப்படும் தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்களை கணனி மூலம் கோட்ட, வலய, மாகாண மட்டங்களில் ஆவணப்படுத்துமாறு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோ பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற யாழ்.மாவட்ட கல்வி நிர்வாகச் செயற்பாடுகள் மற்றும் தேவைகள் தொடர்பான செய்மதித் தொடர்பாடல் மூலமான கலந்துரையாடலின் போதே கல்விப் பணிப்பாளர்களுக்கு இந்தப் பணிப்புரையை அவர் விடுத்தார்.

இந்த வீடியோ கலந்துரையாடலில் திருகோணமலையில் இருந்து மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையிலான உயர் அதிகாரிகள் குழுவும் யாழ்ப்பாணத்தில் இருந்து மாவட்ட, வலயமட்ட கல்வி நிர்வாகிகளும் பங்குபற்றினர்.

ஒரு மணி நேரம் இக்கலந்துரையாடல் நடைபெற்றது. யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து யாழ்.மாவட்ட கல்வி நிர்வாகிகள் கலந்துரையாடலை நடத்தினர். யாழ்.மாவட்டத்தில் உள்ள வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கணக்காளர்கள் மற்றும் அதிகாரிகள், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தலைமையில் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

திருகோணமலையில் இருந்து மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவின் தலைமையில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.இராசையா உள்ளிட்ட மாகாணமட்ட கல்வி அதிகாரிகள் குழு கலந்துரையாடலை நடத்தியது.

கலந்துரையாடல் தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள கல்விப் பணிப்பாளர் வி.இராசையா தகவல் தெரிவிக்கையில்:-

யாழ்.மாவட்டத்துக்கான போக்குவரத்து வசதிகளில் ஏற்பட்டுள்ள சிரமங்களினால் வடக்கு மாகாண கல்வி அதிகாரிகளுக்கும் யாழ்.மாவட்ட மட்டத்திலான கல்வி நிர்வாகிகளுக்கும் இடையிலான நேரடிச் சந்திப்புக்கள், கலந்துரையாடல்களில் ஏற்பட்டிருந்த மட்டுப்படுத்தப்பட்ட நிலைமைகள், இடைவெளிகள், வீடியோக் கலந்துரையாடல் மூலம் ஓரளவுக்கு நிவர்த்திக்கப்பட்டுள்ளன.

இரண்டு பகுதியினரும் நேரடியாக கருத்துக்களை பரிமாறிக் கொண்டதோடு, புள்ளி விவரங்கள் மற்றும் தகவல்களை சேகரிப்பது, மாவட்ட ரீதியில் அவற்றை தொகுப்பது மற்றும் அவற்றை திருத்தமான முறையிலும் ஒருங்கமைக்கப்பட்ட முறையிலும் எதிர்காலத்தில் பேணுவது தொடர்பாக பொருத்தமான கருத்துப் பரிமாறல்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டன.

**தகவல்கள் ஒழுங்கமைக்கப்படும்**

எதிர்காலத்தில் கோட்டமட்டத்தில் பத்துப் பாடசாலைகளை உள்ளடக்கியதாக, கணனி வசதி மற்றும் கணனி வள நிலையங்கள் உள்ள பாடசாலைகளை மையப் பாடசாலைகளாகக் கொண்டு புள்ளிவிவரங்கள், தகவல்கள் தொடுக்கப்பட்டு அவை கோட்ட மட்டத்தில் ஒன்று சேர்க்கப்பட்டு ஒருங்கமைக்கப்பட்டு திருத்தி அமைக்கப்படும். ஒப்புநோக்கப்பட்ட பின்னர் வலய மட்டத்தில் தொகுக்கப்பட்டு வலயங்கள் ஐந்தும் சேர்க்கப்பட்டு மாவட்ட மட்ட தகவல்கள் ஒழுங்கமைக்கப்படும். அவை தொகுக்கப்பட்டு ஒப்புநோக்கப்பட்ட பின்னர் வெளியிடப்படும்.

காலத்துக்குக் காலம் குறிப்பிட்ட தேவைகள் நிமித்தம் தொகுக்கப்படும் தகவல்கள், புள்ளி விவரங்கள் கோட்டமட்டம், வலய மட்டம், மாகாண மட்டம் என்ற வகையில் நிரந்தரமாகக் கணனி மயப்படுத்தப்பட்டு பேணப்படுகின்றன.

இதன் மூலம் எதிர்காலத்தில் திருத்தமான முறையில் தகவல்கள், புள்ளி விவரங்களை வெளியிடவும் கால தாமதம் இன்றி உரிய நேரத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்வ தற்கும் பயன்படுத்துவதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

மாவட்டங்களில் இருந்து உரிய தகவல்களை, புள்ளி விவரங்களை திருத்தமான முறையில் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டு வந்த குறைபாடும் காலதாமதமும் மாகாண மட்டத்தில் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் மாவட்ட, வலய மட்டத்தில் உரிய சேவையை வழங்குவதற்கும் இருந்துவந்த இடர்பாடுகளும் போக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் திருத்தமான, உண்மையான தகவல்களை, புள்ளி விவரங்களை உரிய காலப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம் என மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (202-11)

# புதிய அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்திற்கு புதிய அதிபராக ஆறுமுகம் குமரேசமூர்த்தி கடந்த வெள்ளிக்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக காரைநகர் வியாவில் சைவவித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய இவர் கல்வியியலிலும், பொது நிர்வாகத்திலும் இரண்டு முதுதத்துவமாணிப் பட்டங்களைப் பெற்றவராவார்.

இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய கா.குமாரவேலு ஓகஸ்ட் 18 ஆம் திகதி ஓய்வு பெற்றதை அடுத்து புதிய அதிபராக ஆறுமுகம் குமரேசமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். (201-250)

# மருதங்கேணி உ.அ.அ.பிரிவின் அபிவிருத்திக்கு நிதி

குருநகர்,ஒக்.8

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் இரண்டு செயற்றிட்டங்களை செய்வதற்காக பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ. சிறில் ஒதுக்கீடு செய்துள்ளார்.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் குடத்தனை 6 ஆவது மைல் கட்டையில் அமைந்துள்ள மடுமாதாவின் சிலையை மீள்புனரமைப்புச் செய்வதற்கு ஒரு லட்சம் ரூபாவும், குடத்தனை மகளிர் வாழ்வு நிலையத்துக்கு தையல் இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக 50 ஆயிரம் ரூபாவும் அவரால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (202-51)

# ஐ.ஓ.எம். நிறுவன தலைமை அதிகாரி யாழ்.விஜயம்

குருநகர்,ஒக்.8

ஐ.ஓ.எம். நிறுவனத்தின் தலைமை அதிகாரி மொஹமட் அப்டிக்கர் எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறார்.

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 17 ஆம் திக்தி வெள்ளிக்கிழமை வரை தங்கி நிற்கவுள்ள இவர் யாழ்ப்பாணத்தில் தற்போது தமது நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் பற்றியும் அவற்றின் எதிர்காலத் தேவைகள் தொடர்பாகவும் ஆராய்வார் என ஐ.ஓ.எம். நிறுவனத்தின் யாழ். உப அலுவலக தலைமை அதிகாரி நிக்கலின் சாமிநாதர் தெரிவித்தார். (202-300)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தினமான திங்களன்று சேவையாற்றியோரின் உருவப் படங்கள் திரைநீக்கம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ். பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட தினமான நேற்று முன்தினம் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம் பெற்றன.

பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள் இந்த வழிபாடுகளில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வோடு பல்கலைக்கழக ஆசிரியர் பொது அறையில் பல்கலைக்கழகத்தில் சேவையாற்றி மறைந்த துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் உருவப் படங்கள் திரைநீக்கம் செய்யப்பட்டு அவர்கள் நினைவு கூரப்பட்டனர்.

சம்பந்தப்பட்டவர்களின் உருவப் படங்களுக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு அவர்கள் செய்த பணிகள் நினைவு கூரப்பட்டு உரைகள் நிகழ்த்தப்பட்டன.(அ-1)




# தென்மராட்சியில் மேலும் 19 பேருக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஒக்.8

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்திற்கு சுயதொழில் உதவி கோரி விண்ணப்பித்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் 19 பேருக்கு சுயதொழில் உதவி ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இக் கொடுப்பனவு எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் வழங்கப்படவுள்ளது.

தையல் இயந்திரம் கொள்வனவு செய்ய இருவருக்கும், மாடு வளர்ப்புக்கு மூவருக்கும், ஆடு வளர்ப்புக்கு இருவருக்கும், கோழி வளர்ப்புக்கு 12 பேருக்கும் இக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

குறிப்பிட்ட பயனாளிகள் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். தெரிவானவர்களின் விவரம் வருமாறு:

தே.கிறிஸ்ரி(சரசாலைமத்தி), அ.கிறிஸ்ரீனம்மா(கச்சாய்வீதி, சாவகச்சேரி), க.இன்பராஜ்(மீசாலை வடக்கு), இ.ஜெயரஞ்சி(தாவளை இயற்றாலை), ப.ஸ்ரீலங்கேஸ்வரி(கைதடிகிழக்கு), கி.ஆனந்தலீலா(மீசாலைகிழக்கு), த.சின்னம்மா(மட்டுவில்கிழக்கு), க.நல்லம்மாச்சி(கோயிலாமனை, கொடிகாமம்), ஆ.கந்தசாமி(கட்டுக்காணி வீதி, சாவகச்சேரி), செ.புஸ்பராணி(கெற்பேலி மேற்கு).

க.சகீலா(கரம்பைக்குறிச்சி), வே.நந்தினீஸ்வரி(கைதடி தென்கிழக்கு), ந.லோகநாயகி(ஹென்ஸ்மன் ஒழுங்கை, சாவகச்சேரி), இ.சேதுலட்சுமி(மீசாலை தெற்கு), க.நாகமுத்து(கைதடிதென் கிழக்கு), த.இராஜேஸ்வரி(குடமியான் வரணி), சி.சிவலட்சுமி(உதயசூரியன் வீதி, சாவகச்சேரி), யே.கமலாதேவி (கச்சாய் வீதி, கொடிகாமம்), நி.புஸ்பராணி (நுணாவில் சந்தி) (202-207)

# வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு போஷாக்குத் திட்டம்

## லான்ட் ஓ லேக் நிறுவனம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.8

வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவர்களின் ஊட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் சகல மாணவர்களுக்கும் பால் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'லான்ட் ஓ லேக் லங்கா' பாற்பண்ணை அபிவிருத்தி நிறுவனம் இத்திட்டத்தை செயற்படுத்துகின்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 13 பிரதேச செயலர் பிரிவுகளிலும் பாற்பண்ணை அபிவிருத்தி நடவடிக்கைகளை இந்த நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

இச் செயற்றிட்டத்தின் ஊடாக பால் உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளின் வருமானத்தை கூட்டவும், யாழ்.மக்களுக்கு பால் மற்றும் பால் பொருள்கள் இலகுவாகக் கிடைக்கவும் வழி ஏற்படுத்தப்படுவதாக நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இச்செயற்றிட்டத்தின் ஒரு செயற்பாடாக வேலணை பிரதேசத்தில் திட்டத்தை அமுல்படுத்தி, உற்பத்தி செய்யப்படும் பாலை கொள்வனவு செய்து சந்தைப்படுத்துவதற்காக வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன் இணைந்து இந் நிறுவனம் பணியாற்றுகின்றது. கொள்வனவு செய்யப்படும் பால் பொதி செய்யப்பட்டு கூட்டுறவு நகர் ஊடாக விற்பனை செய்யப்படுகிறது.

நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் மத்தியு க்ரொஸின் உதவியுடன் ஒரு பாற்சாலை திறக்கப்பட்டுள்ளது. இதன் தொடர் நடவடிக்கையாக வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சங்க நிர்வாகமும் பாடசாலையும் இணைந்து கடந்த 3 ஆம் திகதி தொடக்கம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன. (202)

பால் வழங்கும் ஆரம்ப நிகழ்வில்........



# நெற்செய்கை மற்றும் புகையிலைச் செய்கைக்கு மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.8

காலபோக நெற்செய்கை, புகையிலைச் செய்கைகளை மேற்கொள்ள விவசாயிகள் மழையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தமது வயல் நிலங்களை முன்னர் மழை பெய்த போது உழுது தயாராக வைத்துள்ளனர். தொடர்ந்து இரண்டாவது தடவை உழுது நெல் விதைக்க போதிய மழை இன்றி மழையின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்

இதே போல, புகையிலைச் செய்கையில் ஈடுபட வடமராட்சிப் பிரதேச விவசாயிகள் தோட்ட நிலத்தைப் பண்படுத்த மழை பெய்யாமையினால் அதனை மேற்கொள்ளாதிருக்கின்றனர்.

இதேவேளை நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு மானிய உரமும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

உரிய காலத்தில் மழை பெய்யாமையினால் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர். (202-236)

# ஒருங்கிணைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

உடுவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திக்தி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு உடுவில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் உதவி பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் நடைபெற உள்ளது. (202-300)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 08.09.2008 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த

## திருமதி நாகேந்திரம் சின்னம்மா

(யசோ பந்தல் சேவை)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (08.10.2008) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யசோ பந்தல் சேவை,
G.P.S வீதி, கல்வியங்காடு. (79058) குடும்பத்தினர்.

# தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சரசாலை நூலகத்தினர் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூல் நிலையத்தினர் இன்று தொடக்கம் எதிர்வரும் 30ஆம் திகதி வரை பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

இன்று அடுத்த ஆண்டில் பாடசாலைகளில் இணையவுள்ள சிறார்களின் கதை வேளை நேரமும் நிகழ்வும்,

எதிர்வரும் 15ஆம் திகதி சரசாலை வடக்கு பிரிவில் நடமாடும் நூலக சேவை செயற்றிட்டமும், 18ஆம் திகதி இலக்கியக் கருத்தரங்கும்,

20 ஆம் திகதி வாசிப்பில் சிறுவர்களை ஊக்குவிக்கும் படக்காட்சியும், 22ஆம் திகதி பாடசாலை மாணவர்களுக்கான கதை கூறல், வாசிப்பு, பேச்சு, கட்டுரை, கவிதை, பாவோதல் ஆகிய போட்டிகளும்,

23ஆம் திகதி வாசகர்கள், மாணவர்கள் ஆகியோருக்கான பொது அறிவுப் போட்டிகளும், 30 ஆம் திகதி முன்பள்ளி சிறார்களுக்கிடையிலான கொன்றைவேந்தன் மனனப் போட்டியும் இடம்பெறும்.

அத்துடன் சஞ்சிகை, ஆக்கம் செய்தல், பழைய, புதிய புத்தகங்கள் அன்பளிப்புப் பெறல் ஆகியவையும் மேற்கொள்ளப்படுமென நூலகர் இ.தர்மலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார். (202-207)

# முன்பள்ளி ஆசிரியர்கள் இன்று கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ். வர்த்தக தொழில்துறை வேளாண் மகளிர் ஒன்றியத்தினர் யாழ். மாவட்டத்தில் உள்ள முன்பள்ளிகளின் ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று வலி. தென் மேற்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்டத்தில் உள்ள அனைத்து முன்பள்ளிகளிலும் கற்பிக்கும் 25 வருடத்திற்கு மேற்பட்ட சேவைசெய்த ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (202-224)

# முகூர்த்த நிர்ணய, சமஸ்கிருத வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஒக்.8

முகூர்த்த நிர்ணயம், சமஸ்கிருதம் தொடர்பான புதிய வகுப்புகள் நாளை வியாழக்கிழமை விஜயதசமி தினத்தன்று முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை புலோலி புற்றளைப் பிள்ளையார் ஆலய மண்டபத்திலும், உடுப்பிட்டி துவாளிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையிலும் ஆரம்பமாகவுள்ளன. (201)

# தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்குக் கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள் இதற்கு அமைய யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 1997.02.17ஆம் திகதிய 963/1 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

இதற்கமைய இக் கூட்டங்களிற் சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்

| தொ.இல. | கிளையின் பெயர் | கிளை | தவிசாளர் பெயர் | திகதி | நேரம் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | கைதடி வடக்கு | 01 | திரு.சு.கணேசு | 12.10.2008 | 10.00 மணி | கைதடி வடக்கு கிளை மண்டபம் |
| 02. | கைதடி மத்தி | 02 | திரு.T.N.ராஜா | 12.10.2008 | 10.00 மணி | கைதடி முத்தியாவத்தை கந்தசாமி கோயில் முன்றல் |
| 03. | கைதடி மேற்கு | 03 | திரு.வை.கைலைநாதன் | 12.10.2008 | 10.00 மணி | கைதடி மேற்கு கிளை மண்டபம் |
| 04. | கைதடி தெற்கு | 04 | திருமதி க.நல்லதம்பி | 12.10.2008 | 10.00 மணி | கைதடி தெற்கு ஐக்கிய நாணய சங்க மண்டபம் |
| 05. | நாவற்குழி | 05 | திரு.இ.பாலச்சந்திரன் | 12.10.2008 | 10.00 மணி | நாவற்குழி மகாவித்தியாலயம் |
| 06. | கோவிலாக்கண்டி | 06 | திரு.ஐ.நாகேஸ்வரன் | 12.10.2008 | 10.00 மணி | கோவிலாக்கண்டி கிளை மண்டபம் |
| 07. | கைதடி நாவற்குழி | 07 | திரு.வி.சிவகுமார் | 12.10.2008 | 10.00 மணி | தலைமைக்காரியாலய மண்டபம் |
| 08. | மறவன்புலோ | 08 | திரு.க.கமலநாதன் | 12.10.2008 | 10.00 மணி | தலைமைக்காரியாலய மண்டபம் |
| 09. | தனங்கிளப்பு | 09 | திரு.M.S.சண்முகநாதன் | 12.10.2008 | 10.00 மணி | தலைமைக்காரியாலய மண்டபம் |
| 10. | கைதடி நாவற்குழி தெற்கு | 10 | திரு.க.நிமலன் | 12.10.2008 | 10.00 மணி | கைதடி நாவற்குழி தெற்கு சனசமூக நிலையம் |
| 11. | கோவிலாக்கண்டி மத்தி | 11 | திரு.த.செல்வசோதி | 12.10.2008 | 10.00 மணி | கோவிலாக்கண்டி மகாலக்ஸ்மி வித்தியாலயம் |

மேற்படி கூட்டங்களிற்கு கிளைகளின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அறிவித்தல்கள் கிடைக்காது இருப்பினும் ஒவ்வாருவரும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு, வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் குறித்த நேரத்திற்கு உரிய இடங்களிற்குச் சமூகமளித்து தத்தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## கிளைக்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படத் தகுதியற்றவர்கள்

01. கிளையினது வாக்காளர் பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்.
02. 18 வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள்.
03. உடன் முன்சென்ற 3 ஆண்டுகளுக்குள் தீய ஒழுக்கச் செயலுக்காகக் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டவர் அல்லது 3 மாதங்களுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனைக்குத் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்.
04. கடனைத் தீர்க்க வகையற்றவரெனப் பிரகடனஞ் செய்யப்பட்டவர் அல்லது அவ்வாறு ஒரு வழக்கிற் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்.
05. இச்சங்கத்திற்கு அல்லது பதிவுசெய்யப்பட்ட வேறு எக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் எக் கடனையாவது திருப்பிக்கொடுக்காதவர் அல்லது வேறு எவ்விதத்திலும் தவறு செய்தவர்.
06. இச் சங்கத்தில் வியாபாரியெனப் பதிவு செய்யப்பட்டவர் அல்லது சங்கத்தின் நலவுரிமைகளுக்கு முரண்பட்டவகையில் ஒரு வியாபாரத்தை நடத்துபவர்.
07. சங்கத்தில் ஆதாயங்கருதி ஏதாவது ஒரு பதவியை அல்லது இடத்தினை வகிப்பவர் அல்லது ஆணையாளரின் முன்னனுமதியின்றி ஏதாவது தகைமைக் கொடையைப் பெறுபவர்.
08. இச் சங்கத்தின் அல்லது இச்சங்க உறுப்புரிமை வகிக்கும் வேறு எந்தச் சங்கத்திலும் ஊதியம் பெறும் ஊழியராயிருப்பவர்.
09. ஓர் உறுப்பினர் என்றமுறையில் தவிர மற்றப்படி சங்கத்துடன் செய்யப்பட்டிருக்கும் எந்த ஒப்பந்தத்திலோ அல்லது சங்கத்தினாற் செய்யப்படும் எந்த விற்பனையிலோ கொள்வனவிலோ அல்லது சங்கத்தின் நிதியோடு சம்பந்தப்பட்டு அதனாற் செய்யப்படவிருக்கும் அல்லது பேச்சளவிலிருக்கும் ஏதாவது ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கல்களில் மறைமுகமாகவோ நேர்முகமாகவோ அக்கறை கொண்டிருப்பவர்.
10. கூட்டுறவுச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளுக்கமைய தமது பதவியை அல்லது வேலையை கடந்த 5 ஆண்டுகளில் விட்டகல வேண்டிய நிலைக்கு ஆளானவர்.
11. இயக்குநர் சபையினால் அல்லது கிளை நிர்வாக சபையினால் உறுப்பினராகக் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாத அல்லது மேன்முறையீடு இயக்குநர் சபையினால் அல்லது கூட்டுறவுச சங்கங்களின் சட்டத்தில் பிரிவு 6 (2) இன் கீழ் ஆணையாளரால் மீளாய்வு மூலம் அல்லது இவ்விதியின் 2:4 அல்லது 2:6 இன் கீழ் அல்லது வாக்காளர் அட்டவணையிற் பெயர் சேர்க்கப்படாத ஒருவர்.
12. பாராளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள்.
13. அங்கத்தவராகச் சேர்ந்து ரூபா 100/= ஐப் பங்குப் பணமாகச் செலுத்தி முடிக்காதவரும் அங்கத்தவராகச் சேர்ந்து ஒரு வருடம் பூர்த்தியாகதவருமான ஒருவர்.

கூ.அ.உ.ஆணையாளர் பணிமனை,
857, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
07.09.2008

(சங்கத்தின் துணைவிதிப் பிரிவு 22 (1))

ஒப்பம்: பொ.சிவலிங்கம்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்.மாவட்டம்.
(சி/555030)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி விரதங்களில் தலையாயது-நவராத்திரி அவற்றில் தனித்துவம் மிக்கது சரஸ்வதி பூசை

நவராத்திரி வழிபாடு மூலம் சக்தியின் மகிமை விளக்கப்படுகிறது. மனிதனின் முக்கிய தேவைகளான கல்வி, செல்வம், வீரம் இம்மூன்றையும் வேண்டி அவற்றுக்கு அதி பதிகளான சரஸ்வதி, லக்ஷ்மி, துர்க்காபர மேஸ்வரி என்ற மூன்று சக்தி அம்சங்களை யும் வழிபடுவதே இவ்விரதத்தின் நோக்கம்.

முதல் மூன்று நாள்களிலும் வீரத்தையும், தைரியத்தையும் வேண்டி துர்க்கையை - பராசக்தியை வழிபட வேண்டும். அடுத்த மூன்று நாள்களும் செல்வத்தை வேண்டி மஹாலக்ஷ்மியை வழிபடவேண்டும். இறுதி மூன்று நாள்களும் கல்வி, அறிவு, சகல கலைஞானங்கள் என்பவற்றை வேண்டிச் சரஸ்வதி தேவியை வழிபட வேண்டும்.

ஒன்பது நாள் என்கிற கணக்கில் சில சமயம் குறைவுபடுகின்ற சந்தர்ப்பத்தில் எவ்வெவ் தேவியருக்கு, எத்தனை நாள்கள் என்ற பிரச்சினை எழுவதுண்டு. அதற்கு வேறொரு விதியும் சொல்லப்பட்டிருக்கிறது. சரஸ்வதியை மூலநட்சத்திரத்தில் ஆவாஹனம் செய்து வழிபடத்தொடங்கித் திருவோண நட்சத்திரத்தில் உத்வாசனம் செய்ய வேண்டும். அதனை மனத்திலிருத் திச் சரஸ்வதிக்குரிய நாள்களைத் தெரிவு செய்தபின் ஏனைய நாள்களை உசிதப்படி துர்க்கா, லக்ஷ மிக்கு எனப் பிரித்துக்கொள்ளலாம்.

எது எப்படியிருப்பினும், நவராத்திரி நாள்கள் முழுவதும் மூன்று தேவியரையும், ஏன் எல்லாச் சக்தி அம்சங்களையும் ஒருமித்துப் போற்றி வழிபடுவதே நல்லது. ஆலயங்களில் வைக்கப்படும் நவராத்திரி கும்பத்தில் ஒன்பது நாள் பூசைகளிலும் துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி மூவருக்கும் சேர்த்துப் பூசை நிகழ்வதைக் காணலாம். இதனை சமஷ்டி பூசை என்பர்.

ஒன்பதாம் நாள் இரவு விசேஷ பூசை, அக்னிகாரியம், பலிதானம் என்பன நிகழும். சில இடங்களில் மகிஷா சுரவதம் நடத்தப் படும். பத்தாம் நாள் காலையில் (விஜயதசமியன்று) கும் பத்தை உத்வாசனம் செய் வர். இதனைக் கும்பம் சரித்தல் என்று சொல்வர். அம்மன் ஆலயமானால் இக் கும்ப நீரை மூலமூர்த்திக்கு அபிஷேகம் செய்வர். வேறு ஆலயங்களானால் தீர்த்தக் கிணற்றிலோ, ஆற்றிலோ, கடலிலோ ஊற்றிவிடுவது வழக்கம்.



விஜயதசமி நாளில் வன்னி வாழை வெட்டுவது பற்றிச் சிறிது சிந்திக்கலாம். பண்டாசுரனை ஒன்பது தினங்களிலும் அழிக்க முடியாமல் சிவ பிரானுடைய அருள்பெற்றுத் தேவி பத்தாம்நாளில் வதம் செய்தாள் என்ற கதையின்படி அதனை நினைவூட்டவே வாழை வெட்டப்படுவதாகவும் கொள்ளலாம். விஜயதசமியில் வன்னி மரத்தை வழிபாடு செய்யும் வழக்கமொன்று உண்டு. ஒரு சமயம் உமாதேவி களைப்புற்ற போது இந்த மரத்தடியில் இளைப்பாறினாளாம். இராமன் சீதையைத் தேடிப் புறப்படும் போது வன்னி மரத்தை வலம் வந்து வணங்கியப்பின் புறப்பட்டதாகவும் சொல்வார்கள்.

பாண்டவர்கள் அஞ்ஞாத வாசத்தின்போது தங்கள் ஆயுதங்களை ஒரு வன்னி மரத்தில் வைத்திருந்ததாகவும் சொல்வர். எனவே ஆயுதபூசை - நற்காரியம் ஆரம்பிக்கும் விஜய தசமி நாளுக்கும் வன்னிமரத்துக்கும் ஏதோ ஒரு தொடர்பு நெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறது. அதனால்தான் மானம்பூ உற்சவத்தில் வன்னி மரக்கிளையொன்றை வாழை மரத்தில் கட்டி வைத்து அதனைப் பூஜித்து - வாழைவெட்டுநிகழ்த்துகிறார்கள்.

வீடுகளில் நவராத்திரி பூசையை ஆனந்தமான ஒரு கொண்டாட்டமாகவே கொள்வர். தூய்மையுடனும், அழகுப் பொலிவுடனும் திகழும் கொலுமண்டபத்தை அமைத்து அங்கு பூர்வாங்க பூசைகளுடனும், சங்கல்ப பூர்வமாக வும்முறைப்படிகும்பத்தை ஸ்தாபிக்க வேண்டும். சந்திர கும்பம் தனியாக வைக்காமல் சக்தி கும்பத்தை மண் குடத்தில் வைத்துச் சுற்றிவர மண்பரப்பி அதிலே நவதானியங்களிட்டு முளைக்க விடுவது பல இடங்களில் வழக்கமாக உள்ளது. இந்த நவதானியத்தின் செழிப்பைத் தமது குடும்ப வளத்தின் நன்மை, தீமைகளை அறியும் சகுனமாகக் கொள்வார்கள்.

நவராத்திரியின் ஒன்பதாம் நாளாகிய மஹாநவமியன்று சரஸ்வதி பூசை என்றும், கலைமகள் விழா என்றும் சிறப்பித்துக் கூறப்படுவதுடன் ஆயுதபூசை என்றும் கூறப்படுகிறது. கல்விக்கூடங்களிலும், கலைக்கூடங்களிலும், தொழிற்சாலைகளிலும் இத்தினம் மிகுந்த பயபக்தியுடனும், அதேநேரம் ஆனந்த கோலாகலத்துடனும் கொண்டாடப்படுகிறது.

புத்தகங்கள் சரஸ்வதிதேவியின் உறைவிடம். கலைப்பொருள்கள், இசைக்கருவிகள், தொழிற்கருவிகள் முதலிய ஆயுதங்களுக்கும் அதிபதி அவளே. இதனால் மஹா நவமியாகிய ஒன்பதாம் நாள் இவற் றைப் பூசையில் வைத்து வழிபடுவர். அது மட்டுமல்லாமல் அத்தினத்தில் இவற்றைப் பயன்படுத்துவதும் தவிர்க்கப்படுகிறது.

நவராத்திரி காலத்தில் எண்ணெய் தேய்த்து முழுகுதல் விலக்கப்பட்டுள்ளது. ஊசி நூல் கொண்டு பழந்துணி தைப்பதும் கூடாது. புரட்டாதிச் சனி விரதம் இந்த நவராத்திரி நாளினுள் வரும்போது எண்ணெய் தேய்க்காது நீராடி அந்த விரதத்தையும் கைக்கொள்ளலாம். எள்ளெண்ணெய் எரித்து வழிபடுதலும் செய்யலாம்.

> **எந்நாளுமருள்வாய்!**
>
> *பண்பாட்டின் சின்னமே*
> *பழந்தமிழின் மாண்பே!*
> *பண்ணிசைகளுக்*
> *கெல்லாம் அரசியே!*
> *எண்ணிய கலைகளை யெளிதில்*
> *உணர வைக்கும் சரஸ்வதியே!*
> *உன்னைப் பணிந்தோம் இந்நாளில்*
> *எந்நாளுமருள்வாய் தாயே!*
>
> இராமஜெயபாலன்.

**தாரா**

நவராத்திரி விரதத்தை முறையாகக் கைக்கொள்ள விரும்புவோர் முதலெட்டு நாள்களிலும் பகலில் உணவின்றி இரவில் பூசை முடிந்தபின் பால்பழம், பலகாரம என்பன சாப்பிட்டு நவமியில் உபவாசமிருந்து பத்தாம் நாள் விஜயதசமியன்று காலை எட்டரை மணிக்கு முன் பாரணை செய்ய வேண்டும். முடியாதவர்கள் முதலெட்டு நாளிலும் ஒரு நேர உணவுண்டு (பகல் அன்னம்) கடைசிநாளில்பால்,பழம் மட்டும் கொள்ளலாம்.

விஜயதசமியன்று காலை அறுசுவை உண்டி சமைத்து அதனை நிவேதித்து விசேஷ பூசை செய்தபின் நாள்படிப்பு, நாள் கருமங்களை ஆரம்பித்தபின் பாரணை செய்வதே முறை. ஒன்பது வருடங்கள் தொடர்ந்து இவ்விரதம் அநுஷ்டித்தபின் விரதோத்யாபனம் செய்யலாம்.

# தங்கள் தேவையை தாமே நிறைவேற்றிய கைதடி மக்களின் முன்மாதிரி நடவடிக்கை

*தென்மராட்சி, வலிகாமம் பகுதி மக்களின் போக்குவரத்துக்கு பெரிதும் உதவக் கூடிய கைதடி - நீர்வேலி இணைப்பு வீதி பருவமழை காரணமாகச் சிதைவடைந்து நீண்ட காலமாக பயன்பாட்டுக்கு உதவாத நிலையை அடைந்திருந்தது. மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் எப்போதுமே முன்னிற்கும் 'உதயன்' இந்த வீதியை புனரமைப்பதன் அவசியத்தை மக்கள் மன்றம் பகுதியினூடாக 17.02.2008, 15.06.2008 ஆகிய தினங்களில் வெளிப்படுத்தியிருந்தான். எனினும் அரச அதிகாரிகள் இந்த வீதி பற்றிய வெறும் அளவீட்டுப் பணிகளோடு மட்டும் தமது நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டனர். ஏனைய தொண்டு நிறுவனங்களும் மக்களின் கோரிக்கைக்குச் செவிசாய்க்கவில்லை. தன்கையே தனக்குதவி என்று புரிந்துகொண்ட மக்கள் தம்முடைய சுயமுயற்சியால் கைதடி - நீர்வேலி இணைப்பு வீதியைப் புனரமைத்து, பாவனைக்கும் திறந்து விட்டுள்ளனர்.*

*எல்லாக் காரியங்களுக்கும் அரச, தனியார் நிறுவனங்களிடமே கையேந்தி காலத்தை வீணே கழிக்கும் இன்றைய சூழலில் கைதடி மக்களின் செயல் எல்லோராலும் முன்மாதிரியாகக் கொள்ளப்படவேண்டும்.*

'உதயன்' நாளிதழின் மக்கள் மன்றப் பகுதியில் 17.02.2008 சனிக்கிழமையன்று "தென்மராட்சிக்கான மாற்றுப் போக்குவரத்துப் பாதைகள்; அதிகாரிகள் அக்கறை காட்டுவார்களா?" என்பது பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அதில் கைதடி-நீர்வேலி இணைப்பு வீதியின் முக்கியத்துவம், அதன் தற்போதைய சீரழிவுநிலை, நீரோட்டப் பகுதியில் பாலம் ஒன்றுகட்டப்பட வேண்டியதன் அவசியம், வீதி புனரமைப்பின் அவசியம் என்பன சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

அத்துடன் கைதடி நவபுரம் - மட்டுவில் வீதியின் முக்கியத்துவம், அது தற்போது முற்றாக அழிவடைந்துள்ள நிலையும் அதன் புனரமைப்பின் அவசியமும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதன் ஞாபகமூட்டலாக 15.06.2008 'உதயன்' மக்கள் மன்றப் பகுதியில் "மீண்டும் எப்போது வருவார்கள்?" என்ற தலைப்பில் கைதடி- நீர்வேலி இணைப்பு வீதியின் அவலநிலை புகைப்படத்துடன் பிரசுரமாகியிருந்தது. இவ் வீதியை இரட்சிக்க அரச துறையினர், உள்ளூர், சர்வதேசத் தொண்டர் நிறுவனங்கள் வருவார்களா? என்ற ஏக்கம் வேண்டுகோளாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

இவ்வீதியை இரட்சிக்க மீட்பர்கள் யாருமே வரவில்லை என்பது சோகமான ஒரு விடயம். தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் கைதடி வடக்கு ஜே/288, கிராம அலுவலர் பிரிவில் உள்ள இந்நீரோட்டப் பகுதியில் மின்சாரத் தூண்களைப் பயன்படுத்தி பாலம் போன்றதொரு கட்டுமானத்தைச் செய்வதுடன், வீதி புனரமைக்கப்படவும் தீர்மானிக்கப்பட்டது. பருவகால மழை நெருங்குவதன் காரணமாக மிகக் குறுகிய காலத்திலேயே நிதிச் சேகரிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன. வேலைத்திட்டத்திற்கான நிதியின் பெரும் பகுதியை கைதடிக் கிராம மக்களும், குறிப்பிடத்தக்க அளவை வீதியின் பாவனையாளர்களும் வழங்கினர்.

ஆறு கிராம அலுவலர் பிரிவுகளுள்ள கைதடிக் கிராமத்தின் பொது அமைப்புக்கள் யாவும் இந்த நற்கைங்கரியத்துக்கு ஆர்வத்துடன் உதவின. உணர்வு பூர்வமாகப் பங்களித்தனர். பொதுமக்கள் கட்டம் கட்டமாகச் சிரமதான அடிப்படையில் பணியாற்றி, மிகக்குறுகிய காலத்தில் வீதி புனரமைக்கப்பட உதவினர். உழவு இயந்திர உரிமையாளர்கள் கொடுப்பனவு வாங்காது தவணை முறையில் வாகனத்தைக் கொடுத்து மண் ஏற்ற உதவினர்.

வெள்ள நீரோட்டப் பகுதியில் பலமான கட்டுமானம் இடப்பட்டு மின்சாரத்தூண்கள் பரவி அடுக்கப்பட்டு பாலம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

பொதுமக்கள் தமது பொருளாதார அடிக்கட்டுமானத் தேவைகள் அனைத்தையும் அரசாங்கம் அல்லது உள்ளூர், சர்வதேசத் தொண்டு நிறுவனங்களேதான் நிறைவேற்ற வேண்டுமென எதிர்பார்க்கின்றனர்.

பொதுமக்களின் எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்வதற்கு இத் துறையினர் பலவிதத் தடைகளை எதிர்கொள்கின்றனர். செய்யப்பட்ட அபிவிருத்தி வேலை களைப் பாதுகாக்கும் அக்கறையும் பொது மக்களிடம் குறைவாக உள்ளமை வருந்தத்தக்கது.

## அரச, தனியார் நிறுவனங்கள் கைவிட்டபோதும் மனம் சலிக்கவில்லை அவர்கள்....

கைதடியில் முழுமையான மக்கள் பங்கேற்புடன் செய்யப்பட்ட இந்த அபிவிருத்தி வேலை மிகச் சிறந்த முன்மாதிரியான செயற்றிட்டமாகும். உள்ளூரில் வசதி படைத்த மக்களிடம் சிறிது, சிறிதான நிதிப் பங்களிப்பைப் பெற்று சிறியளவு அபிவிருத்தித் திட்டங்களை மக்களும் நிறைவேற்றலாம் அல்லவா?

ஆலயங்களுக்கு அழகின் மேல் அழகைக் கூட்டக் கோடிக்கணக்கில் செல விடப்



சிதைந்த நிலையில் கைதடி-நீர்வேலி இணைப்பு வீதி



மக்களின் முயற்சியால் புனரமைக்கப்பட்ட வீதி

படும் நிகழ்வுகள் ஏராளம் நடக்கின்றன. புகழ்பாடும் விழாக்கள் தாராளமாய் அரங்கேறுகின்றன. இவ்வாறான ஆடம்பரச் செலவின் காற்பங்கு நிதியை அபிவிருத்தி நோக்கத்துக்காக திருப்பி விட்டால் பொது மக் களில் குறிப்பாக வறிய மக்களின் எவ்வளவோ தேவைகளை நிறைவு செய்யலாம். ஏழையின் சிரிப்பிலேதான் இறைவனைக் காணலாம்.

கைதடி மக்களின் அபிவிருத்தி முன்மாதிரிப் புதிய சிந்தனையை மக்கள் மனதில் தோற்றுவிக்க வேண்டும். இவ்வீதியில் வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில் நீர்வேலிப் பக்கம் சட்டவிரோத மண் அகழ்வால் வீதிக்குப் பாதிப்புக்கள் ஏற்பட்டது. இதுவும் 05.06.2008 உதயன் மக்கள் மன்றப் பகுதியில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இது தொடர்பாக வலி.கிழக்கு கோப்பாய்ப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸ்உடன்உரியநடவடிக்கைஎடுத்துஇதனை முற்றாக நிறுத்தியுள்ளார். அத்துடன் இவ் வீதியின் வலி.கிழக்குப் பிரதேசசபைப் பக்கமுள்ள சேதமுற்ற பகுதிகளைத் திருத்துவதற்கு பிரதேச சபைச் செயலாளர் ந.நடராசா நடவடிக்கை எடுத்திருக்கிறார். இதற்கு உரும்பிராய்க் கமநல சேவைகள் நிலையமும் உறுதுணையளித்து வருகின்றது.

பொதுமக்கள் தமது குறைகளை, தேவைகளைப் பத்திரிகைகளில் எழுதுவதுடன் மாத்திரமோ, கூட்டத்திற்கு கூட்டம் கதைப்பதுடன் மட்டுமோ நின்று விடக்கூடாது. அது அபிவிருத்தியைக் கொண்டு வந்து விடவும் மாட்டாது. மாற்று வழிகளைத் தாமே தேடி அபிவிருத்திகளை உருவாக்கும் புதியதொரு பண்பாட்டின் ஆரம்பக் குறியீடாக இந்த அபிவிருத்தி வேலை அமைய வேண்டும்.

மருதன்,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடே
# தேர்த் திருவிழாச் சிறப்



## நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசி

துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்யும் ஸ்ரீ மகாவிஷ்ணு பகவான், இன்று வண்ணையில் தேரேறி வருகின்றார். அழகிய சித்திரத்தேரில் அலங்காரமாகப் பவனிவரும் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமானின் அழகுத் திருக்கோலத்தைக் கண்குளிரக்கண்டு தரிசிக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்தவர்களே இந்த ரதோற்சவத்தைக் கண்டுகளிக்க வாய்புக் கிட்டுகிறது.

தேரேறி வருங் கண்ணன்- இந்நாட்டின் போரோய்ந்து நாட்டில் நிம்மதியும் சமாதானமும் அமைதியும் சுபிட்சமும் பெற்று எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ - அருட்கடாட்சத்தை வழங்க வேண்டுமென நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து வரதராஜப் பெருமாளின் பொற்பதம் போற்றி உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

ஈழம் வாழ் மக்கள் எல்லோருமே நலம் பெறவேண்டுமென்று அவாவுறுகின்றோம். கீதை சொன்ன கண்ணன் நல்லபாதை காட்டவும், எல்லா மக்களும் இனமத வேறுபாடின்றி சுகமே வாழவும் பெருமான் அருள்புரிய வேண்டுமென இறைஞ்சுகின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமகா சந்நிதானம்.

## மஹோற்சவ குருவின் ஆசிச் செய்தி

ஈழத்துத் திருப்பதியாகிய வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய ரதோற்சவம் இன்றாகும். 'வேம்' என்பது பாவம் என்றும் 'கட' என்பது களைபவர் என்றும் பொருள்படும். ஆகவே பக்தர்களின் பாவம் நீக்கும் பரந்தாமன் இன்று ஸ்ரீதேவி பூமிதேவியுடன் வரமருளும் ராஜாவாகச் சித்திரத் தேரிலே அருட்பவனி வருகின்றார். இஃது கண்கொள்ளாக் காட்சி!

புரட்டாதி மாதம் கன்னிராசிக்குரியது; இதன் கிரகம் புதன். புதன் கிரகத்தின் அதிபதி மகாவிஷ்ணு. எனவே பகவான் நாராயணன் நாமத்தைப் பாராயணஞ் செய்தால் முத்தி நிச்சயம் என்று வைசம்பாயன ஸம்கிதை கூறுகிறது.

''நாராயண சப்த மாத்திரம் விமுக்த துக்கா ஸுகினோ பவந்து''

என்றபடி வேங்கடேச வரதராஜனின் நாமத்தை ஜெபித்து நல்வாழ்வு வாழலாம். சம்ஹாரத் தொழிலைக் குறிக்கும் ரதோற்சவத்தில் ஆன்மாக்களின் அகவிருள் அழிக்கப்பட்டு மனம் பரிபக்குவ நிலையை அடைகின்றது.

குறையெதுவுமில்லாத கோவிந்தப் பெருமான் அடியவர்களின் துயர் நீக்கி எல்லோரும் இன்புற்றிருக்க திருவருள் பாலிக்கவேண்டும் என்று உளமாரப் பிரார்த்தித்து ஆசிகளை நல்குகின்றோம்.

''வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க, போய பிழையும் புகுதருவான் நின்றனவும், தீயினில் தூசாகும் செப்பேலோரெம்பாவாய்'' என்பது ஆண்டாள் திருப்பாவை.

நாளையதினம் திருவோணத்தில் தீர்த்தமாடும் திருமால், வேங்கடேச வரதராஜப் பெருமானாக இன்று திவ்ய பேரானந்த அழகுத் திருக்காட்சி நல்கித் திருத்தேரிலே வீற்றிருந்தெழுந்தருளுகின்றார்.

அவன் பங்கஜ பாதம் பணிந்து அனைவரும் அருள் பெற்றுய்யப் பிரார்த்திக்கின்றோம்.

''சர்வத்ர கோவிந்த நாம சங்கீர்த்தனம்!
கோவிந்தா!! கோவிந்தா!!!''

பிரம்மஸ்ரீ சாமி. சுந்தரேசக் குருக்கள், மஹோற்சவ பிரதம குரு,
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்
பெருமாள் தேவஸ்தானம்.

## ஆலய ஆதீன மகாசபைத் தலைவரின் ஆசிச்செய்தி

இன்று வேங்கடேசவரதராஜப் பெருமாள் ஆலயத்தில் ரதோற்சவம். வருடாந்த மகோற்சவத்தில் இது மிக முக்கியமானது. வண்ணை ஸ்ரீ வேங்கடேசவரதராஜப் பெருமான் தமது பக்தர்களுக்கு அருள்புரிவதற்காக இன்று அழகுத் தேர்மீது அருட்பவனி புறப்படுகின்றார்.

இற்றை நாள்வரைபட்ட துன்பங்களையும் துயரங்களையும் அழித்தொழித்து, இனிமேலாவது அமைதியும் ஆறுதலும் ஆனந்தமும் நிறைந்த சமாதான சகவாழ்வு வாழ எம்பெருமான் அருள்புரிய வேண்டுமென அடியவர் சார்பில் பாத பங்கயம் பணிந்து போற்றுகின்றோம்.

எமது நாட்டில் சந்தோஷமான நல்வாழ்வு மலர வேண்டுமென எல்லாம் வல்ல யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமானை வணங்கித் துதித்து வாழ்த்தி இறும்பூதெய்துகின்றோம்.

திரௌபதிக்கு உற்ற நேரத்தில் துகில் கொடுத்து மானங்காத்த கண்ணன் எமக்கும் நல்ல வாழ்வுக்கு வழிவகுத்து அருள்புரிய வேண்டு மென்று உளமாரப் பிரார்த்தித்து அமைகின்றோம்.

'கண்ணன் கனியமுதுண்ண வாரீர்' என அழைக்கின்றோம்.

நா.ஸ்ரீரஞ்சன், தலைவர், ஆதீன மகாசபை,
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்
தேவஸ்தானம்.


தரமான பொருட்களை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு சகல வசதிகளுடன் யாழ் நகர மக்களின் உன்னத பணியில்



JAFFNA MULTI PURPOSE CO - OPERATIVE SOCIETY (LTD)
Co - op City I
127, K.K.S Road, Jaffna
கூட்டுறவு நகர்
127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

JAFFNA MULTI PURPOSE CO - OPERATIVE SOCIETY (LTD)
Co - op City II
Main Street, Jaffna
கூட்டுறவு நகர்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

சுத்தமான பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருட்கள்,
குழந்தைகளுக்கான பால் மா வகைகள்,
கேக் வகைகள், ஐஸ்கிறீம் வகைகள்
குளிர்பானங்கள், பழரசங்கள், பிஸ்கற் வகைகள்,
அழகுசாதன வாசனைப் பொருட்கள்,
அன்பளிப்புப்பொருட்கள், பாடசாலைப் பொருட்கள் எழுதுகருவிகள், போன்ற பல வகையான பொருட்களை
நியாயமான விலையில் சுயமாக தெரிவுசெய்யலாம்.

அரச திணைக்களங்களின் அமோக ஆதரவை பெற்று தனது விற்பனை விநியோக சேவையில் புதிய பரிமாணமொன்றை வகுத்து வெற்றி நடைபோட்டு வருகின்றது

கூட்டுறவு நடமாடும் பொதி செய் விற்பனை நிலையம்

நடமாடும் சேவையுடன் மற்றுமொரு சேவையாக எமது சங்க எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் மக்களின்
சுக துக்க நிகழ்வுகளில் பங்கேற்கும் நோக்கமாக அவர்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருட்களை
அவர்களின் வீட்டுக்கே கொண்டு சென்று வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ.து
127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சியை வாய்ப்பாக்குவாரா கலைஞர்?

ஈழத்தமிழரின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவில் ஓர் அதிரடி களநிலை மாற்றம் நேர்ந்திருக்கின்றது.

தமிழகத்தின் அனைத்துத் தரப்புகளுமே ஒரு தலைப்பட்சமாக ஈழத் தமிழர்களுக்காக ஒரே நிலைப்பாட்டை எடுத்துக் குரல் எழுப்பும் 'அதிசயம்' திடீரென உருவாகியிருக்கின்றது.

ஈழத் தமிழர்களுக்கு எதிரான தனது யுத்த தீவிரத்தைக் கொழும்பின் சிங்கள அரசு தொடருமானால் தமிழகம் இனிமேலும் கையைக் கட்டிக்கொண்டு வெறுமனே பார்த்திராது என்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியே திடீரென எச்சரிக்கை வெளியிட்டு ஆவேசத்தோடு துள்ளிக் குதிக்கும் அளவுக்கு நிலைமையில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டிருப்பது யுத்தப் பேரழிவில் சிக்கி, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஈழத் தமிழினத்துக்கு ஊட்டச்சத்தும், உத்வேக உயிர்ப்பும், புத்தெழுச்சியும் அளிக்கும் ஊக்கியாக அமைந்திருக்கின்றது.

இத்தகைய உணர்வு நிலை மாற்றம் காலம் பிந்தியேனும் - இந்தக் கட்டத்திலேனும் - ஏற்படுவதற்குக் களம் அமைத்துக் கொடுத்து, காத்திரமான நகர்வுகளை முன்னெடுத்த தமிழக அரசியல் சக்திகளை ஈழத் தமிழர்கள் என்றென்றும் நன்றியோடு நினைவுகூரவேண்டும்.

வழமையாகவே ஈழத் தமிழினத்திற்காக உயிரோடும், உணர்வோடும் ஒன்றிக் குரல் எழுப்பி வரும் ம.தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி, திராவிடர் கழகம், தமிழர் தேசிய இயக்கம் உள்ளிட்ட ஈழத் தமிழர் நலன் பேணும் திராவிட அமைப்புகள், விடுதலைச் சிறுத்தைகள் போன்றவை வகுத்த அரசியல் களத்தில், இடதுசாரிக் கட்சிகளும் சந்தர்ப்பம் உணர்ந்து இணைந்து கொண்டமை, இந்த விடயத்தில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.கவின் மௌனத்தைக் கலைத்து, இலங்கையில் அல்லற்பட்டு அவலப்படும் ஈழத் தமிழர்களுக்காக ஏதேனும் விரைந்து செய்தாக வேண்டும் என்று வெளிப்படையாகவே அக்கட்சியைப் பிரகடனப்படுத்த வைக்கும் கட்டாயத்திற்கு உள்ளாக்கியது

அத்தகைய அறிவிப்பை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா வெளியிட்டதும், அவரின் அ.தி.மு.க. உள்ளிட்ட தமிழகத்தின் ஏனைய அனைத்துத் தரப்புகளும் ஈழத் தமிழர்களுக்காக - அவர்களின் நலன் காப்பதற்காக - விரைந்து, ஆக்க பூர்வமான நடவடிக்கையைத் தமிழகம் எடுத்தாக வேண்டும் என்ற கருத்தை தெளிவுபடுத்தி, உறுதியான நிலைப்பாட்டை ஸ்திரமாக வெளியிட்டு விட்டன என்ற உண்மையை உணர்ந்து கொண்டார் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி.

இனியும், இலங்கை விவகாரத்தில் தமது 'மதில் மேல் பூனை' நிலைப்பாட்டைத் தாமும் தமது தி.மு.கவும் தொடர்ந்தால், தமிழகத்தின் பால் கிளர்ந்தெழுந்துள்ள ஈழத் தமிழர் ஆதரவு அலை - சூறாவளி - தங்களைத் தூக்கி வீசி, ஒதுக்கியே விடும் என்பதை உணர்ந்து கொண்ட கலைஞர், முறுக்கி விடப்பட்ட பொம்மை போல துள்ளிக் குதித்து, சீறிப் பாய்ந்து பணியாற்றத் தொடங்கிவிட்டார்.

ஒருபுறம் "இலங்கையில் இரத்த அபிஷேகம் நடைபெறாமலேயே புரட்சிப்பூ, புதுமைப்பூ, ஜனநாயகப் பூ, விடுதலைப் பூ, மறுமலர்ச்சிப்பூ, உரிமைப் பூ, தமிழர்களின் வாழ்வுப் பூ பூக்கவேண்டும் என்பதுதான் எனது ஆசை, தி.மு.கவின் கருத்து" - என்று வழமை போல தமிழில் 'கயிறு திரிக்கும்' உரையை - தமிழக மக்களின் காதில் பூச்சுற்றும் வாய்ச் சவடால் பேச்சை - தமிழக முதல்வர் கருணாநிதி ஆற்றினாலும் -

மறுபுறம், ஈழத் தமிழர் விடயத்தில், கொழும்புச் சிங்கள அரசை அத்துமீறாமல் கட்டுக்குள் கொண்டு வரச்செய்யும் கண்டிப்பான நடவடிக் கையை புதுடில்லி மத்திய அரசைக்கொண்டு எப்படியாயினும் மேற்கொள்ளச் செய்விக்கவேண்டும் என்ற உறுதிப்பாடு அவரிடம் தொக்கி நிற்பதையும் அவரது கடந்த ஓரிரு நாள் உரைகள் வெளிப்படுத்தாமல் இல்லை.

ஈழத் தமிழர்களுக்காகத் தமிழகத்தில் உணர்வோடு பீறிட்டுக் கிளர்ந்திருக்கும் எழுச்சிக்கு - புது உத்வேகத்துக்கு - இந்தியத் தேசியக் கட்சிகளான காங்கிரஸ், பாரதீய ஜனதாக் கட்சி போன்றவற்றின் முழு ஆதரவும் - அவை விரும்பியோ, விரும்பாமலோ கூட - கிடைத்திருப்பதால் -

இந்த எழுச்சி நிலையை வசமாகப் பயன்படுத்தி ஈழத் தமிழர்களின் அடிப்படை அபிலாஷைகளை நிறைவு செய்யும் ஆக்கபூர்வமான தீர்வை நோக்கி இவ்விடயத்தை நகர்த்தி முன்னெடுப்பதற்கான தகுந்த சூழலும், சந்தர்ப்பமும், வாய்ப்பும் தமிழக முதல்வருக்குக் கிட்டியிருக்கின்றன.

இந்த எத்தனத்தில் அவர் சறுக்குவாரானால் - குறுகிய அரசியல் சுயலாபங்களைக் கருத்தில் கொண்டு ஈழத் தமிழர் நலனைக் கோட்டை விடுவாரானால் - வரலாறு அவரை மன்னிக்காது. வரப்போகும் இந்தியத் தேர்தலும் கூட அவருக்குப் பாடம் படிப்பித்து விட்டுப் போகும் நிலைதான் ஏற்படும்.

தமிழகத்தின் இன்றைய எழுச்சியை ஒன்றிணைத்து, உத்வேகப்படுத்தி, ஈழத் தமிழருக்கு நியாயம் பெற்றுத்தரக் காரியமாற்றுவாரா அவர்? உலகத் தமிழினம் அவரது நகர்வை உற்று நோக்கிப் பார்த்திருக்கின்றது.

# சிறுவர்களைப் படையில் சேர்க்கும் அமைப்புகளுக்கு எதிராக அமெரிக்காவில் சட்ட நடவடிக்கை

## ஜனாதிபதி புஷ் கைச்சாத்திட்டு அங்கீகாரம்

வாஷிங்ரன், ஒக்.8

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ், பயங்கரவாதத்துக்கு எதிரான புதிய சட்ட மூலம் ஒன்றில் கடந்த 3ஆம் திகதி கைச்சாத்திட்டார்.

இச்சட்டத்தின்படி சிறுவர்களை படையில் சேர்க்கும் எந்தவொரு நாட்டைச் சேர்ந்த எந்தவொரு அமைப்பின் தலைவர் மீதும் அமெரிக்காவில் வைத்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

இதன்படி இலங்கையிலும் சிறுவர்களைப் படையில் சேர்க்கும் இராணுவ அமைப்புக்கள் மற்றும் ஆயுதக் குழுக்களுக்கு எதிராக அமெரிக்காவில் சட்ட நடவடிக்கையை எடுக்க முடியும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் களவிசாரணைகளின்படி இலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பு, குடும்பங்களை அச்சுறுத்தி சிறுவர்களை படைக்கு ஆள்சேர்ப்புச் செய்துள்ளனர் என்றும் -

கருணா குழுவினர், சிறுவர்களை கடத்திச் சென்று படைப்பயிற்சி அளித்துள்ளனர் என்பதும் - தெரியவந்துள்ளதாகக் கூறப்பட்டது.

அத்துடன் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெறும் சிறுவர் கடத்தலுக்கு ஸ்ரீலங்காப் படையினர் துணைபோயுள்ளனர் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (50-2)

# உயர் நீதிமன்ற உத்தரவினால் பதவி இழந்தார் சட்டமா அதிபர்

கொழும்பு, ஒக்.8

அரச ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை அதிகரிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கும் விதத்தில் அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் செல்லுபடித் தன்மையை இடைநிறுத்தி உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் விடுத்த தடை உத்தரவை அடுத்து, அந்த வர்த்தமானி அறிவித்தலின் கீழான அதிகாரத்தின் அடிப்படையில் சட்டமா அதிபர் சி.ஆர்.டி. சில்வாவின் பதவிக் காலத்தை நீடித்து ஜனாதிபதி விடுத்த உத்தரவும் செயல் இழந்தது. அதனால் சட்டமா அதிபரும் பதவி இழந்தார்.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தன, கே.ஸ்ரீபவன் ஆகியோரைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயமே இந்த உத்தரவை நேற்றுமுன்தினம் விடுத்தது.

அரச ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதை மாற்றியமைத்து, தேவைப்பட்டோரைப் பதவியில் நீடிக்கச் செய்வதற்கான உத்தரவை ஜனாதிபதி விடுக்கத்தக்க வகையில், அவருக்கு அதிகாரம் அளிக்கும் விதத்தில், வர்த்தமானி அறிவித்தல் ஒன்று ஜனாதிபதியின் பெயரால் ஜனாதிபதியின் செயலாளரால் அண்மையில் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் தாம் சுவீகரித்த அதிகாரத்தைக் கொண்டு, சட்டமா அதிபர் சி.ஆர்.டி சில்வாவின் பதவிக்காலத்தைக் கடந்த ஜூன் மாதம் முதல் நீடித்திருந்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இத்தகைய அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கும் விதத்தில் வெளியான வர்த்தமானி அறிவித்தலை ஆட்சேபித்து மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் பணிப்பாளர்களுள் ஒருவரான றொஹான் எதிரிசிங்க உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

அந்த வழக்கு நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிமன்றம் வர்த்தமானி அறிவித்தலின் செல்லுபடித் தன்மைக்கு இடைக்காலத் தடைவிதித்தது.

இந்த வர்த்தமானி அறிவித்தலின் கீழ் செய்யப்பட்ட பதவி நீடிப்புகளும் செயல் இழக்கின்றன என உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அறிவித்தது.

இதனால் சட்டமா அதிபர் சி.ஆர்.டி. சில்வாவும் உடனடியாகப் பதவியிழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார் என்று கூறப்படுகின்றது.

## கிழக்குப் பல்கலைக்கழக வகுப்புகள் திங்களன்று மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 8

ஒன்றரை மாதங்களாகத் தடைப்பட்டிருந்த கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பமாகின.

கடந்த ஒகஸ்ட் மாதம் அந்தப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வந்த தெற்கைச் சேர்ந்த சிங்கள மாணவர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டமையைத் தொடர்ந்து பல்கலைக்கழகக் கல்வி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

அங்கு இயல்பு நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் கல்வி நடவடிக்கைகள் சுமுகமான முறையில் தொடக்கிவைக்கப்பட்டன என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-சி)

# சமய ரீதியான கட்டடங்களை நிர்மாணிக்க அனுமதி பெறவேண்டும்

## மத அலுவல்கள் அமைச்சு அறிவிப்பு

சமய ரீதியான கட்டடங்களை நிர்மாணிக்கும்போது உள்ளூராட்சித் திணைக்களம், மத அலுவல்கள் மற்றும் ஒழுக்க மேம்பாட்டு அமைச்சு ஆகியவற்றின் அனுமதியைப் பெறவேண்டும்.

இவ்வாறு மத அலுவல்கள் மற்றும் ஒடுக்க மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் எச்.எம்.ஹேரத் அறிவித்துள்ளார்.

சமய ரீதியான கட்டடங்களை ஒழுங்கற்ற முறையில் நிர்மாணிப்பதனால் முரண்பாடுகளை ஏற்படுத்தும் காரணிகள் எமது சமூகத்தின் பல்வேறு பிரிவுகளிலும் உருவாகியுள்ளதாகவும் இதையடுத்தே இந்தப் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். (202-207)

# வண்ணை பெருமாள் கோயிலில் இன்று காலையில் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஒக்.8

வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த் திருவிழா இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிப்பார். முற்பகல் 11.30 மணிக்கு சுவாமி தேரில் இருந்து இறங்குவார். நண்பகல் 12 மணிக்கு மஹா ஆசீர்வாதம் இடம்பெறும்.

நாளை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு திருக்கல்யாணம் இடம்பெறும்.இந்த ஆலய பெருந்திருவிழா கடந்த மாதம் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. (203)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம், ஒக்.8

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடல் நடைபெற்று சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரிடம் பெயர்ப்பட்டியல் சமர்ப்பிக்கப்படவிருப்பதால் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய தொண்டர் ஆசிரியர்கள் அனைவரையும் உரிய ஆவணங்களுடன் தமது பெயரை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (201)

## கோப்பாய் பிரதேசத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்


நல்லூர், ஒக்.8

கோப்பாய் பிரதேசத்தில் உள்ள ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை கோப்பாய் லயன்ஸ் கழகம் மேற்கொண்டுள்ளது.

அடுத்தவாரம் அளவில் இந்த கௌரவிப்பு நிகழ்வு நடத்தப்படவுள்ளதாக கழகத்தின் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா தெரிவித்தார். (202-111)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 23 | 09.10.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: | தசமி |
| | பி.இ.04.07வரை |
| நட்சத்திரம் : | திருவோணம் |
| | பி.இ.05.31 வரை |
| விஜயதசமி, கேதாரகௌரிவிரதம் | |
| சுபநேரம் : | 07.32 -09.02 |
| ராகுகாலம் : | 01.32-03.02 |



சாவகச்சேரி நகரப் பகுதியில் கடந்த நான்கு வருடங்களாக பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ள எரிபொருள் நிலையத்தினையே படத்தில் காண்கிறீர்கள்.

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்படும் இந்த எரிபொருள் நிலையம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தினால் கடந்த 2003ஆம் ஆண்டு பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்க நிதி ஒதுக்கப்பட்டு தென்னிலங்கை ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக ஒப்பந்தகாரர் இடைநடுவில் கைவிட்டுச் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வேலை பூர்த்தி செய்யப்படாமல் உள்ளதால் எரிபொருள் நிரப்ப வருவோரும் அங்கு பணிபுரிவோரும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வேலையை முன்னெடுக்க எவரும் இல்லையா என மக்கள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது.

(படம்: தென்னவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்



மனமிருந்தால் மார்க்கமுண்டு. படத்தில் நீங்கள் பார்க்கின்ற நபர் 1995 ஆம் ஆண்டு நிகழ்ந்த விபத்தொன்றில் இடுப்போடு, உடல் அவயவங்களையும் இழந்து விட்டார். உலகிலுள்ள பெரியபெரிய மருத்துவர்கள் எல்லாம் இனி இவர் நடைப்பிணம்தான் எனக் கைவிரித்து விட்டனர். ஆனாலும் சீன மருத்து ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த மருத்துவ விஞ்ஞானிகளின் அயராத முயற்சியால் உருவாக்கப்பட்ட இயந்திரக் கால்களைப் பொருத்திக் கொண்டு, அசைந்து திரிகின்றார் இந்த மனிதர். எல்லா உறுப்புகளும் ஒழுங்காக இருந்தும் மூலையில் சுருண்டு கிடப்பவர்களுக்கு இந்தத் தகவலும், படமும் சமர்ப்பணம்.



சிவலிங்கத்தை எல்லோருமே பார்த்திருப்போம். சிவனின் குறியீட்டுப் பொருளாக - அருவுருவமாக - அது அமைக்கப்பட்டிருப்பதே வழமை. ஆனால் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டு, சுழிபுரம் சம்புநாதேஸ்வரர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சிவலிங்கம். ஐந்துபக்கங்களிலும் சிவனின் முக உருவம் செதுக்கப்பட்டு- பஞ்சமுக லிங்கமாக - அபூர்வ லிங்கமாகக் காட்சியளிக்கின்றது.

(படம்:காந்தன்)





பாம்பென்றால் படையும் நடுங்கும். ஆனால் இந்தப் படை பாம்மையே நடுங்க வைத்திருக்கின்றது. இலங்கையின் அனுராதபுரக் காடுகளில் தாவரவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஆய்வாளர் குழுவொன்று 'அனகொண்டா' இனத்தைச் சேர்ந்த பாம்பொன்றை இனங்கண்டு அதனைப் பிடிக்க முயன்றனர். எனினும் அனகொண்டா இவர்களைத் தாக்க முயலவே வேறு வழியின்றி அதனைக் கொன்று விட்டனர். இறந்தபின் அந்த அனகொண்டாவின் வயிற்றிலிருந்து 30க்கும் மேற்பட்ட அனகொண்டா குட்டிகளும் இறந்த நிலையில் மீட்கப் பட்டுள்ளன.

மலையும் மடுவும் சந்தித்தால் எப்படியிருக்கும்? இப்படித்தானிருக்கும். உலகில் மிக உயரமான மனிதரான பாவோ சிசூனும் (7 அடி 9 அங்குலம்), உலகிலேயே மிகச் சிறிய மனிதருமான பிங்பிங்கும் (2அடி 4 அங்குலம்) இருவரும் அண்மையில் சீனாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளின் போது, எதிர்பாராத விதமாகச் சந்திக்க நேர்ந்தது. இந்த அரிய காட்சியை அங்கிருந்த புகைப்படக்காரர்கள் தமது கமெராக்களுக்குள் சிக்க வைத்துவிட்டார்கள்.





சைவமும், தமிழும் செழிக்கவென அருந்தொண்டாற்றிய ஆறுமுகநாவலரைப் பற்றி எல்லோருக்குமே தெரியும். ஆனால் அவர் வாழ்ந்து, மறைந்த வரலாற்றுப் பெருமைமிக்க அவரின் வீடு, அழிவடைந்த நிலையில், தனியே ஒரு சுவராக மட்டுமே தற்போது காட்சியளிப்பது பெரும்பாலானோருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. யாழ். அருட் காட்சியகத்தால் பேணப்பட்டு வருகின்ற ஆறுமுகநாவலரின் வீட்டின் எச்சங்கள் பற்றி இன்றைய இளைய தலைமுறை அறிந்து கொள்ளவும், பார்வையிடவும், பேணவும் முன்வர வேண்டும். ( படம்:கலைஞன்)



ஈருடலும் ஒருயிரும் போல இணைந்து வாழ்வது பற்றிக் கேள்விப் பட்டிருக்கின்றோம். ஒருடலும் ஈருயிரும் கொண்ட - ஒட்டிப்பிறந்த - அபூர்வ மனிதர்களும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் மனிதர்கள் மட்டுமல்ல மீன்களும் ஒட்டிப்பிறக்கும் என்பது தாய்லாந்திலுள்ள பாங்கொக் நீர் அருங்காட்சியகத்தில் நிருபணமாகியுள்ளது.

பிறந்து 8 மாதங்கள் நிரம்பிள்ள இந்த இரட்டை மீன்களைக் காண பாங்கொக் நீர் அருங்காட்சியகத்தில் கூட்டம் அலைமோதி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆண் இனம் அழியும் அபாயம் இன்னும் 30 கோடி ஆண்டுகளுக்கு இல்லை

உலகில் ஆண்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து செல்கின்றது. இப்படியே சென்றால் ஆண் இனமே இல்லாது அழிந்து விடுமோ என்று அஞ்சுபவர்களுக்கு ஒரு நற்செய்தி.

"ஆண்கள் இனம் முழுவதும் அழியும் அபாயம் இன்னும் 30 கோடி ஆண்டுகளுக்கு ஏற்படாது" என்று ஆய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

'X','Y'குரோமோசோம்கள்(Gene) இணையும்போது கருவில் ஆண் குழந்தை உருவாகின்றது. இந்நிலையில் 'Y'குரோமோ சோம்கள் அழிந்து வருகின்றன. இப்படியே சென்றால் அவை முற்றிலும் அழியும் நிலை உருவாகலாம். இதனால் ஆண் இனமே உலகில் இல்லாமல் அழிந்து விடும் எனப் பலவேறு ஆய்வு முடிவுகளை விஞ்ஞானிகள் வெளியிட் டிருந்தனர். அடுத்த 1.25 லட்சம் ஆண்டுகள் தொடக்கம் ஒரு கோடி ஆண்டுகளில் ஆண்கள் இனமே அழிந்து விடும் அபாயம் உள்ளது என்றும் விஞ்ஞானிகள் அபாயச் சங்கு ஊதியிருந்தனர்.

ஆனால், இன்னும் 30 கோடி ஆண்டுகளுக்கு 'Y' குரோமோசோம் மரபணுக்கள் முற்றாக அழியும் அபாயம் இல்லை என புதிய ஆய்வுகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் சான் டியாகோ பல்க லைக்கழகத்தைச்சேர்ந்த பெண் விஞ்ஞானி டோரிஸ் பச்டிரோக் இந்தப் புதிய முடிவுகள் தரும் ஆய்வறிக்கையை ஐதரா பாத்தில் நடந்த மனித மரபணு அறிவியல் மாநாட்டில் சமர்ப்பித்துள்ளார்.

X,Y மரபணுக்கள் 30 கோடி ஆண் டுகளில் இருந்து 15 கோடி ஆண்டுகளுக்கு முன் உருவானதாகக் கண்டுபிடிக்கப்பட் டது. இவை உருவானபோது Y குரோ மோசோம்களில் ஆயிரத் துக்கு மேற்பட்ட மரபணுக்கள் இருந்துள்ளன. ஆனால் தற்போது 30 முதல் 50 மரபணுக் கள் மட்டுமே உள்ளன. இதைக் கருத்தில் கொண்டுதான் Y குரோமோ சோம்களின் மரபணுக்கள் முழுவதும் அழிந்துவிடும் என்று விஞ்ஞானிகள் கணித்தனர். இதனாலேயே ஆண் இனம் அழிந்துவிடும் என முந்திய ஆய்வுகளின் முடிவுகள் தெரிவித்தன.

இந் நிலையிலேயே புதிய முடிவை டோரிஸ் பச்டிரோகி வெளியிட்டுள்ளார். Yகுரோமோகசோம்கள் உருவாகி 5 கோடி ஆண்டுகளில்தான் பெரும்பாலான மரபணுக்கள் அழிந்தன. பின்னர் வந்த ஆண்டுகளில் மரபணுக்கள் அழிவது குறைந்துவிட்டது. இன்னும் 30 கோடி ஆண்டுகளுக்குப் பிறகும் கூட Y குரோமோசோம்களில் குறைந்தபட்சம் 20 மரபணுக்கள் அழியாமல் இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தீபிகா,

# கனவுகள் நனவாகின்றன: விண்வெளிக்கு 'லிப்ட்' பயணம்



கே.கண்ணன்,
ஒட்டுமடம்.

விண்வெளிக்குச் செல்லும் 'லிப்டை' உலகிலேயே முதல் முறையாக ஜப்பான் விஞ்ஞானிகள் வடிவமைத்து வருகின்றனர். உலகம் முழுவதும் பல்வேறு துறை விஞ்ஞானிகளுக்கும் விண்வெளி குறித்துப் பல கனவுகள் உள்ளன. அதில் கற்பனைக்கு எட்டாத கனவாக விண்வெளிக்கு ஒரு 'லிப்ட்' என்பது இருந்தது. அது நிறைவேறும் தருணம் வந்துள்ளது. ஜப்பான் விஞ்ஞானிகள் எளிதாக இதை வடிவமைத்துள்ளனர்.

பூமியுடன் சேர்ந்து சுற்றும் செயற்கைக் கோள் ஒன்று விண்ணில் நிறுத்தப்படும். பூமியில் இருந்து மிக வலுவான, அதே சமயம் பெரிதும் எடை குறைவான கேபிள்கள் செயற்கைக்கோளுடன் இணைக்கப்படும். பூமியில் இருந்து பெரிய 'லிப்ட்' இயக் கப்படும். இதில் ஏராளமானோர் பய ணம் செய்யலாம். சூரிய ஒளி ஜெனரேட் டர்களை எடுத்துச் செல்லலாம். கதிர்வீச்சுக் கழிவுப்பொருள்களை அடைத்து எடுத்துச் செல்லலாம். எத்தனை 'லிப்ட்'கள் வேண்டுமானாலும் இயக்கலாம். புவியீர்ப்புச் சக்தியை முறியடித்து 'லிப்டை' இயக்குவது சிரமமான காரியம் அல்ல என்று ஜப்பான் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அதற்கு அதிக சக்தி தேவைப்படாது. இன்னும் சொல்லப் போனால், விண்கலத்தை ஏவுவதற்குத் தேவைப்படும் சக்தியைவிட 100 மடங்கு குறைவான சக்தி இருந்தால் போதும். வெளிநாடு செல்வது போல யார் வேண்டுமானா லும் 'லிப்ட்' மூலம் விண்வெளிக்குச் செல்ல முடியும் என்று கூறினார் இத் திட்டத்தின் தலைவர் சுயுசி ஒனோ . இந்தத் திட்டம் நாசா உள்ளிட்ட அரச நிறுவனங்களை சர்வதேச அளவில் பெரிதும் கவனத்தை ஈர்த்துள்ளது. விண்வெளி 'லிப்ட்' தொடர்பான ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இதற்கான வடிவமைப்பைச் சிறப்பாகத் தயாரித்து அளித்தால், கவர்ச்சிகரமான பரிசுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.★★★



# இடுப்புச் சதை குறையணுமா?



இரவில் அன்னாசிப் பழத்தைச் சின்னதாக வெட்டி அதனுடன் 2 கரண்டி ஓமம், தண்ணீர் என்பவற்றைச் சேர்த்து நன்கு வேக வைத்து விடுங்கள்.

மறுநாள் காலை 5 மணிக்கு எழுந்து, வேக வைத்த அன்னாசியை நன்கு பிசைந்து வடிகட்டிக் குடியுங்கள். இடுப்புச் சதை குறைந்துவிடும்.

# நிச்சயம்...

நாளை
என் சாம்பலின் மீது
ஒரு கவிதைத் தொகுப்பு
வெளியாகும்...
எனக்குள் தங்கிய
அவளின் இதயமெனும் பெயரில்...

சா.ரமேஸ்குமார், மீசாலை கிழக்கு.

# செல்வமாய் வளர்த்த கரடியைப் பிரிந்ததால் தோமஸ் தற்கொலை



குட்டியிலிருந்து அன்புடன் வளர்த்து வந்த கரடியிடமிருந்து பிரிந்ததால், விலங்கியல் பூங்கா ஊழியர் தற்கொலை செய்து கொண்டார். பெர்லின் விலங்கியல் பூங்காவில் பல்வேறு விலங்குகள் உள்ளன. 2006ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் போலார் கரடி, குட்டி ஈன்றது. ஆனால், அந்தக்குட்டியை தன்னுடன் சேர்த்துக் கொள்ளவில்லை. தாயால் நிராகரிக்கப்பட்ட அந்தக் கரடிக்குட்டியை பூங்காவின் ஊழியர் தோமஸ் டியோர் பிளெயன் (வயது43) வளர்க்கத் தொடங்கினார்.


அப்போது,"மனிதர்களால் போலார் கரடிக்குட்டி வளர்க்கப்படுவதை விட, அதை கொலை செய்வது மேல்" என்று, விலங்குகள் நல அமைப்புக்கள் போர்க்கொடி உயர்த்தின. இருப்பினும், கரடிக்குட்டியை தோமஸே வளர்க்கத் தொடங்கினார்.

குட்டி இருக்கும் இடம் தோமஸ் இருக்கும் இடமாக மாறியது. அவர் சாப்பிடுவது, தூங்குவது எல்லாமே அங்கேதான். குட்டி தூங்கிய பின்னர்தான், இரவில் தனது குடியிருப்புக்குத் தூங்கச் செல்வார். கரடிக்குட்டியும் தோமஸை தனது தாய் மற்றும் தந்தையாகவே அடையாளம் கொண்டிருந்தது.

இந்த அதிசயத்தைப் பார்ப்பதற்காக, சைபீரியாவிலிருந்து கூட இங்கு பார்வையாளர்கள் வந்து குவியத் தொடங்கினர். தோமஸின் செல்லத்தாலும், தனக்கு பார்வையாளர்கள் மத்தியில் கிடைத்த ஆர்வத்தாலும் மகிழ்ச்சியுடன் துள்ளி விளையாடி வந்தது கரடிக்குட்டி.

இப்போது, அது நன்கு வளர்ந்து, அதிக எடையுடன் உள்ளது. இதனால் தோமஸுக்கு பிரச்சினை ஏற்படும் என்று கருதிய, பூங்கா நிர்வாகம், அவரை கரடியிடமிருந்து விலகுமாறு உத்தரவிட்டது. தோமஸ் பார்வையாளர்கள் போல, தூர நின்று, கரடியை பார்த்து கண்ணீர் விட்டு வந்தார். கரடியிடமிருந்து தன்னை பிரித்த துக்கம் தாங்காமல், தனது குடியிருப்பில் தோமஸ் தற்கொலை செய்து கொண்டார். அவருக்கு, மனைவியும், மூன்று குழந்தைகளும் உள்ளனர்.

# விதி வரையும் பாதை



கடற்கரையில் தனித்துப் போரிடுகிறது
ஓர் ஆலமரம்;
கடல் பக்கமிருந்து,
காற்றடிக்கையில் தரைப்பக்கம்
தலைதிருப்பி,
எதிர்க்காற்றுக்கு
கடலுக்கு தலைநீட்டி
அடைக்கலமாகிறது;
நீர்க்காகங்களின் கூ(வீ)டுகளுக்கு........
இறுமாப்புடன் கடலலை
அடிமீது மோதி மிரட்டி
வேரடி மண்ணை துளாவிச்செல்லும்;
இருந்தும்,
மண்ணைவிட்டு விலகாத
பிரியம்; பற்று
குயில்கள், குருவிகளுக்கு
இரையுண்ணப் பழமும்
உறங்க இடமும்
இளைப்பாற 'சில்'லென்ற காற்றும் வீசும்;
சில மனிதர்களுக்கும் கூட...........

எம்.சதீஸ்,
நெடுந்தீவு -10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவனும் உரும்பிராய் கிழக்கு **திரு.திருமதி நந்தகுமார்** தம்பதியரின் புதல்வனும் **திரு.அ.சிவானந்தன்** அவர்களின் பேரனுமாகிய

**செல்வன் ந.சிவதர்சன்**

2008ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 136 புள்ளிகளைப் பெற்றுச் சித்தி எய்தியமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், இவரது கற்றலுக்கு உதவிய வகுப்பாசிரியை கே.மகாலிங்கம் அவர்களுக்கும் மற்றும் அன்பொளி ஆசிரியர் வே.அன்பழகன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர் மேன்மேலும் கல்வியில் சிறந்து விளங்கி, வாழ்க்கையில் உயர்வுபெற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ அருளுமாறு எல்லாம் வல்ல அல்வாய் குமிழடி விநாயகர் ஆசிவேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்: திருமதி சரஸ்வதி சிதம்பரநாதன் (பாட்டி), திரு.மயில்வாகனம் அம்பிகைபாலன் குடும்பத்தினர் (சின்ன அம்மம்மா குடும்பத்தினர்).

குமிழடி,
அல்வாய்.

(79076)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய மாணவனும் விஜயமோகன் லலிதகுமாரி தம்பதியரின் செல்வப் புதல்வனுமான

**துவாரகன்**

2008 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 129 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டு பாடசாலை அதிபர் ஏனைய ஆசிரியர்கள், அன்பொளி ஆசிரியர் வே.அன்பழகன் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் மேலும் கல்வியில் உயர்வடைய மருதடி விநாயகரை வேண்டுகிறோம்.

வாழ்த்துபவர்கள்:
அப்பா, அம்மா, அம்மம்மா, ஆஸ்திரேலியா அத்தை, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமா குடும்பம், அக்காமார், அண்ணாமார், சித்தி, சித்தப்பா.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (79065)

## அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்
### கன்னாதிட்டி யாழ்ப்பாணம்



## கேதார கௌரி விரதம்

விரதாரம்ப தினமாகிய நாளை (09.10.2008) வியாழக்கிழமையன்றும், மறுதினம் 10.10.2008 வெள்ளிக்கிழமையன்றும் காலை 10.00 மணிக்கும், மற்றைய தினங்களில் பி.ப. 3.30 மணிக்கும் சிவலிங்க பூஜை நடைபெறுமென்பதையும், விரதகாரர்கள் தங்கள் பெயர்களை முன் கூட்டியே பதிவுசெய்து கொள்ளும் வண்ணமும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(79063) தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள்.

# EXPRESS ASIA
## Manpower Consultant
## கனடா மற்றும் மலேசியாவில் உடனடி வேலை வாய்ப்பு

**கனடாவில்**
கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு 2 வருட ஒப்பந்தத்தில் உடனடி வேலை வாய்ப்புக்கள்.

*(MALE/FEMALE)*

| | | | |
|---|---|---|---|
| NURSES | - 12 | NANNIES | - 06 |
| WELDERS | - 16 | ELECTRICIANS | - 05 |
| MASONS | - 18 | | |

**மலேசியாவில்**
பிரபல உதிரிப்பாக உற்பத்தித் தொழிற்சாலைக்கு இயந்திர இயக்குநராகவும் உதவியாளராகவும் பணிபுரிவதற்கு சாதாரண ஆங்கில அறிவுடைய 18-35 வயதிற்கும் உற்பட்ட ஆண்/பெண் இரு பாலார்களுக்கும் உடனடி வேலைவாய்ப்பு.

கடவுச்சீட்டும் 10 நிழற்படங்களும் (PASSPORT SIZE PHOTO'S) சுயவிவரத்துடன் (BIO-DATA) கீழ்க்காணும் முகவரிக்கு சமுகமளிக்கவும். (79083)

**NO:- 49A, AMBALAVANAR ROAD,**
**ATHIYADY, JAFFNA.**
TELE- 021222 8846
email:imp.man power@yahoo.com.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி றாகினி பகீதரன் அவர்களின் அன்புத் தந்தை

**சிவலிங்கம் நடராசா**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/தாவடி இ.த.க.பாடசாலை.

## மானிப்பாயில் நிவாரணம் விநியோகம்

நவாலி, ஒக் 8

மானிப்பாய் ப.நோ. கூ.சங்கக் கிளைகளில் சமுர்த்திப் பயனாளிகளுக்கான நிவாரணம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

இவை முடிவுற்றதும் உலக உணவுத் திட்டத்தின் உணவுப் பொருள்கள் வெள்ளைநிறக் அட்டைக்கு வழங் கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

மேலும் பாவனையாளர்களுக்குப் பங்கீட்டு அட்டைக்கு 2 கிலோ சீனி வீதம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.(202-100)

## கலை வர்த்தகக் கல்லூரி
பெரியரசடி வீதி, சாவகச்சேரி.

A/L பரீட்சை எடுத்த, பல்கலைக்கழக அனுமதி பெற்ற மற்றும் பல மாணவர்களின் வேண்டுதல் விஜயதசமியில் ''நிறைவேறுகிறது''

''ஆங்கிலத்தில் மிகக் குறுகிய காலத்தில் பேச, எழுத, வாசிக்க உரையாட புதிய பிரிவு ஆரம்பமாகிறது''

**SPOKEN ENGLISH WITH GRAMMAR LECTURE**

*By: Mr.Nishanthan (Dip.in English)*
ஆரம்பம் - 09.10.2008 வியாழன்
நேரம் - 3.00 p.m

## தவறிவிட்டது

தாவளை, இயற்றாலை, வரணி என்னும் முகவரியுடைய இராமு சுப்பிரமணியம் என்பவரது தேசிய அடையாள அட்டை (520954619V) 04.10.2008 சனிக்கிழமை, யாக்கரு இராணுவச் சோதனைச் சாவடிக்கும் நெல்லியடிச் சந்திக்குமிடையில் தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் தந்துதவவும்.

1) தாவளை, இயற்றாலை, வரணி அல்லது
2) நெல்லியடி கிராம சேவையாளர் - J/367

என்னும் முகவரியில் கொடுத்துதவவும்.

சன்மானம் வழங்கப்படும்.

## அல்லாரை ஐங்கரன் முன்பள்ளியில் சிறுவர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக் 8

மீசாலை, அல்லாரை ஐங்கரன் முன்பள்ளியின் சிறுவர் தினவிழா கடந்த முதலாம் திகதி முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது.

சாவகச்சேரிப் பிரதேசசபை உத்தியோகத்தர் சி.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சோ ஆ நிறுவன அகதிகள் பராமரிப்புப் பிரிவின் திட்ட முகாமையாளர் யேசுதாசன் யூட் வோல்டன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை யில் சித்திபெற்ற முன்பள்ளியின் பழைய மாணவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

முன்பள்ளிச் சிறார்களின் தீப நடனம். பேச்சு, குழுப்பாடல், ஆத்திசூடி, திருக்குறள். கதை கூறல், கவிதை, காவடி, அபிநயப்பாடல் ஆகியனவும் இடம்பெற்றன. (202-207)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலை, பருத்தித்துறை 2008ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான



சா.சாருஜன் 145



ச.நிதர்ஷனா 122



கு.தனுஷன் 118

100புள்ளியினைப் பெற்ற மாணவி சி.வினோதினி இவர்கள் அனைவரையும் உளமாரப் பாராட்டி மேலும் பல தேர்ச்சிகள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம். இவர்களுக்கு ஊக்கமும், வழிகாட்டலும் வழங்கிய அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச்சங்கம்**
யா/புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை, பருத்தித்துறை.

(சி-555038)

## யாழ். மாநகரசபைக்கு கொழும்பிலிருந்து கப்பல் மூலம் தார் ஏற்றி வருவதற்கான கேள்வி அறிவித்தல் - 2008

மாநகரசபைக்குத் தேவையான தார் பரல்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்று கப்பல் மூலமாக யாழ்ப்பாணம் கொண்டு வந்து மாநகரசபைக் களஞ்சியத்தில் ஒப்படைப்பதற்கான சேவையாளர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் யாவும் மாநகரசபை ஆணையாளருக்குப் பதிவுத் தபால் மூலம் 15.10.2008 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| விவரம்: | 1 தார் பரலுக்கான ஏற்றி இறக்கல் கூலி உட்பட விலை |
|---|---|
| 1. 140 லீற்றர் கொண்ட தார் பரல் | - |
| 2. 180 லீற்றர் கொண்ட தார் பரல் | - |
| 3. 200 லீற்றர் கொண்ட தார் பரல் | - |

(சி-555038) மாநகர ஆணையாளர்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 21 | 08 |
| F | F |
| 01 | 09 |
| F | F |
| 1936 | 2008 |



திருமதி
## கணபதிப்பிள்ளை அன்னலட்சுமி

அன்போடு எமை வளர்த்த தாயே
ஆலமரமாய் நாம் வளர்ந்து நிற்கையிலே
இமைப் பொழுதில் எமை விட்டுப் பிரிந்தீரே
பிள்ளைகள் தவித்திருக்க இறைவனடி சேர்ந்தீரே.

எங்கள் குலதெய்வம் சிவபதமடைந்த செய்திகேட்டு சமுகம் தந்தும், தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (08.10.2008) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


செட்டிச்சோலை,
[illegible] (79081)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில்

# ...றப்புமலர் 08.10.2008



## வைணவ பூசை விதானம் வழுவாது நடத்தப்படும் வேங்கடேசப் பெருமாளின் திருவிழாக்கள்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச தேவஸ்தானத்தில் மகோற்சவ காரியங்கள் அனைத்தும் வைகானச வைணவ ஆகமத்திற் கேற்ப கிரியா அம்சங்கள் யாவும் நிகழ்த்தப் பெறுகின்றன. இத் தேவஸ்தானம் வைஷ்ணவ சம்பிரதாயத்தையும், கோட்பாட்டையும் அனுசரிக்கும் ஒரு திவ்வியமான தேவஸ்தானமாக குடா நாட்டு மக்கள் கருதுகின்றனர்.

இத்தேவஸ்தானத்தில் கி.பி.1878ஆம் ஆண்டு தொடக்கம் மகோற்சவம் நடத்தப்பட்டு வருகின்றது, அன்று தொடக்கம் இன்று வரை கஸ்தம் பாதச்சாத்துப்படி நடைபெற்று வருகின்றது. கஸ்தம் பாதச் சாத்துப்படியின் அவசியம் பற்றி எமது தேவஸ்தானப் பத்தியில் கூறப்பட்டுள்ளது. வைணவ ஆகம சாஸ்திரங்களுக்கு ஏற்றவகையில் கஸ்தம் பாதச் சாத்துப்படி உருப்படிகள் இத்தேவஸ் தானத்தில் அமைந்துள்ளன. ஆதியில் வைஷ்ணவ அந்தணர்கள் இச்சாத்துப்படியைச் செய்து வந்தனர். இப்பொழுது இவர்களிடம் பயிற்சி பெற்ற சைவ அந்தணர்கள் செய்து வருகின்றனர். இத்தேவஸ்தானத்தில் மஹோற்சவங்களில் வீதிவலம் வரும் வாகனங்களாவன கருடன், ஆதிஷேசன் ஆகிய ஐந்து தலை நாகம், அன்ன வாகனம், அனுமன், யானை, குதிரை, பூந்தண்டிகை, சப்பறம் ஆகியன காணப்படுகின்றன.

மஹோற்சவ விழாக்கள் புரட்டாதி மாதத்தில் பூர்வபட்சத்து அத்தம் அல்லது சித்திரை நட்சத்திரத்தில் ஆரம்பமாகின்றது. முதல் நாள் விழா கொடியேற்ற விழாவாகும். கொடியேற்ற விழாவன்று சுவாமி தேவிமாருடன் சூரிய விருத்தச்சேவையில் எழுந்தருளுகின்றார். வைணவ ஐதீகத்தின்படி சேவை என்பது திருவிழாவையும் வாகனத்தையும் குறிக்கும் சொல்லாகும். கொடியேற்ற இரவு சுவாமி மாத்திரம் அன்ன வாகனத்தில் காட்சி தருகின்றார். பிரம்மதேவனது படைத்தற்தொழிலை ஞாபகப்படுத்தவே அன்னவாகனத்தில் எழுந்தருளுகின்றார்.

இரண்டாம் நாள் இரவு சுவாமி ஐந்து தலை நாகம் மீது சயனம் செய்யும் வகையில், அழகிய கஸ்தம் பாதச்சாத்துப்படி செய்யப்படுகின்றது. இக்காட்சி பகவான் திருப்பாற்கடலில் பள்ளி கொள்ளும் நிலையை உணர்த்துகின்றது.

மூன்றாம் நாள் இரவு சுவாமி கருடன் மீது வீதிவலம் வருகின்றார். கஸ்தம் பாதச்சாத்துப்படி செய்யப்படுகின்றது. இக் காட்சி பகவானது காத்தற்தொழிலை ஞாபகப்படுத்துகின்றது. நான்காம் நாள் இரவு சுவாமி அனுமன் மீது எழுந்தருளிக் காட்சி தரு கின்றார். சுவாமி கையில் வில்லு, அம்புடன் சாத்துப்படி நடைபெறுகின்றது. இக்காட்சி ஸ்ரீராமனது அவதாரத்தை உணர்த்துகின்றது.

ஐந்தாம் நாள் இரவு சுவாமி பூந்தண்டிகையில் வீதிவலம் வருகின்றார். சுவாமி மிக அலங்காரமாகச் செல்வந்தனது கோலத் தில் கஸ்தம் பாதச்சாத்துப்படி செய்யப்படுகின்றது. இக்காட்சி பகவானை செல்வந்தனாகச் சித்திரிக்கின்றது.

ஆறாவது நாள் இரவு சுவாமி யானைமீது வீதிவலம் வருகின்றார். சுவாமி கையில் துரட்டி கொடுத்து கஸ்தம்பாதச் சாத்துப்படி செய்யப்படுகின்றது. இக்காட்சி பகவான் முதலை வாயில் இருந்து யானையைக் காத்த செயலை உணர்த்துகின்றது.

ஏழாம் நாள் இரவு சுவாமி சப்பறத்தில் வெண்ணைத்தாளியுடன் எழுந்தருளும் காட்சி. இது ஸ்ரீகிருஷ்ணன் வெண்ணெய் உண்ட காட்சியை கஸ்தம் பாதச்சாத்துப்படி மூலம் மக்களுக்கு உணர்த்தும் காட்சியாகும். வண்ணை திருவேங்கடவனது மஹோற்சவங்களில் எட்டாம் நாள் பகல் சுவாமியும் அம்பாள்மாரும் சின்னக்கருட வாகனத்தில் உள் வீதிவலம் வருகின்றனர். இரவு சுவாமி குதிரைமீது காட்சி தருகின்றார். கையில் சவுக்குக் கொடுத்து மறுகையில் கடிவாளத்துடன் சஸ்தம் பாதச்சாத்துப்படி செய்யப்படுகின்றது. இக்காட்சியில் பகவானை குபேரனாகவும் கல்கி அவதாரம் பெற்றவனாகவும் சித்திரிக்கப்படுகின்றது. ஒன்பதாம் நாள் பகல் சுவாமி தேவிமாருடன் மிக அலங்காரமாகச் சிம்மாசனத்தில் காட்சிதருகின்றார். சுவாமிக்கு ஜடாமுடி தரித்து சுவாமியையும் தேவிமாரையும் மிக அலங்கரிக்கின்றார்கள் கஸ்தம் பாதச்சாத்துப்படி மூலம். இது சுவாமி யுத்தத்திற்கு எழுந்தருளும் காட்சியைச் சித்திரிக்கின்றது.

இத்தேவஸ்தானத்தில் ரதோற்சவமும் தீர்த்தோற்சவமும் மிக விரிவான கிரியைகளுடன் தொடக்கப்படுகின்றன. ரதோற்சவத்தன்று சுவாமி தேரினின்று இறங்கி வந்து தேவஸ்தானத்தினுள் வரும்போது பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்கப்படுகின்றார். பாததீர்த்த வைபவம் நடை பெற்றதும் கோயில் ஓதுவார் ஊழியர்களாகிய மங்கள வாத்தியக்காரர், சங்குநாதம் ஒலிப்பவர், பூமாலை

(12ஆம் பக்கம் பார்க்க...)


நம்பிக்கையான நகைகளுக்கு நாணயம்மிக்க இடம்

**பொ.அம்பலவாணர் நகைமாளிகை**

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அசல் 22 கரட்டில் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்துபெற்றிட

**பூரணி நகை மாடம்**

1/5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**I I S CITY CAMPUS**

இல.200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

நவயுகம் மகிழும் புதுமலர்ப்பூங்கா

புதுமணத்தென்றலில் பூத்து நிற்கும் நவநாகரிக நகை உலகம்

**சிறி மீனாட்சி தங்க மாளிகை**

187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சாரங்கா நகைமாடம்**

தங்கப்பவுண் நகை வியாபாரம்

157/1,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சாரங்கன் நகைமாடம்**

107,109,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

அசல் 22 காரட் தங்க நகைகளுக்கு சிறந்த இடம்

**சானுகா நகைமாடம்**

200G,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**வேல் முருகன் வாணிப நிலையம்**

தற்காலிக நவநாகரிக கட்டடங்களுக்கு ஏற்ப சகல விதமான வர்ணப் பெயின்ட் வகைகளும், சுண்ணாம்பு கட்டடப் பொருள்களின் விற்பனையாளர்.

56A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T.P:021 2229437

**மைதிலி நகை மாடம்**

89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தங்க நகை வியாபாரி

**யாழ்.மைதிலி ஜூவலர்ஸ்**

157J, SEA STREET, COLOMBO -11.

**NATIONAL ELECTRONICS**

*Radio, T.V, Video Deck, Electronic Equipments Repairs & Sales.*

372,Clock Tower Road, Jaffna.
T.P: 021 222 6434, Mobile : 077 5792244

**ARRUL**

**COMMUNICATIONS & BROWSING CENTRE**

INT, Brown Road,Jaffna.
Phone : +94 - 212227097
Fax : +94 - 212227646
E-mail : arrulcom@gmail.com

உள்ளூர், வெளியூர் தொலைபேசி வசதிகள், போட்டோக் கொப்பி, பக்ஸ், ஈ- மெயில் போன்ற பல்வேறு சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில்

# தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 08.10.2008

## வைணவ பூசை விதானம்.....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

புனைபவர், திருத்தொங்கல் புனைபவர், தேருக்கு சருக்கு முண்டியிட்ட ஆசாரியர், சலவைத்தொழிலாளர், களஞ்சிய வேலை செய்வோர் ஆகியோருக்கு வேட்டி சால்வை வழங்கப்படுகின்றது. சுவாமி வசந்தமண்டபம் அடைந்ததும் பெரிய மண்டபப்படி அமைத்து சர்க்கரை, புளி, தயிர் சாதவகைகளும், பழவகைகளும், காளாஞ்சிகளும் பானகம் ஆகியனவும் சர்க்கரையுடன் தேன் கலந்த நீர், மோர் ஆகியன நிவேதனம் செய்யப்படுகின்றன. இதன் பின் மகா ஆசீர்வாத வைபவம் நடைபெறுகின்றது. இரவு தேரடி வைபவ விழா நடைபெறுகின்றது.



பத்தாம் நாள் காலையில் தீர்த்தோற்சவ அங்கம் ஆகிய பொற்சுண்ணம் இடித்தல் வைபவம் பொற்சுண்ணப்பாக்கள் இசைக்கப்பெற்று நடைபெறுகின்றது. இதன்பின் பேரிதாடன உற்சவம் நடைபெற்றுச்சுவாமியும் அம்பாள்மாரும் கருட வாகனத்தில் தீர்த்தோற்சவத்திற்குச் செல்கின்றனர். தீர்த்த வைபவம் நிறைவுற்றதும் சுவாமி உள்வீதியில் யாக மண்டபத்தில் நின்று பூர்ணாகுதியை ஏற்றுக்கொண்டு கோபுரவாயில் சென்று பாத தீர்த்தம் பெற்று அமர்கின்றார். கொடித்தம்பத்தின் முன்னால் ஆதிஸ்ரீவேங்கடேசப் பெருமாளுக்கு ஆசனம் கொடுக்கப்படுகின்றது. இவருக்குத் திருவோணத் தீபபூசை நடத்தப்பட்டு திருவோணத் தீபம் ஏற்றப்படுகின்றது. இதன்பின் மூலமூர்த்திகளுக்கு யாக கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இதன் பின்பு கோபுரவாயிலிருந்து சுவாமி வசந்த மண்டபத்தை அடைந்ததும் யாகப்பொட்டும் முளைப்பாலிகையும் தீர்த்தமும் அடியவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இத்துடன் தீர்த்தோற்சவ விழா நிறைவுபெறுகின்றது. இரவு கொடியிறக்க விழா நடைபெற்று சுவாமியும் அம்பாள்மாரும் சந்திரப் பிறைச்சேவையில் வெளிவீதி வலம் வருகின்றனர். இத்துடன் கொடியேற்ற விழா நிறைவுபெற்று பதினோராம் நாளன்று மாலையில் சுவாமிக்குத் திருக்கல்யாண வைபவம் இடம்பெற்று, சுவாமி அம்பாள்மாருக்கு திருமாங்கல்யதாரணம் செய்கின்றார். இதன்பின் சுவாமி மணவாளக் கோலத்தில் வெளிவீதி வலம் வருகின்றார். இந்த உற்சவத்திற்கு கஸ்தம் பாதச்சாத்துப்படி செய்து மிக அலங்காரமாக மாப்பிள்ளைக் கோலத்தில் மணவறையை வந்தடைகின்றார். இதேபோன்று அம்பாள்மாருக்கும் மிக அழகான சாத்துப்படி செய்யப்படுகின்றது. தேவிமாருடன் சுவாமி மணவாளக் கோலத்தில் பூந்தண்டிகையில் வரும் காட்சியைக் காண ஏராளமான பக்தர்கள் அன்று தேவஸ்தானத்தில் கூடுகின்றார்கள்.

பன்னிரண்டாம் நாள் மாலையில் சுவாமி வசந்த மண்டபத்தில் பூசையாகிய பின் திரு ஊஞ்சல் பாக்கள் ஓதுவார் இசைக்க திருவூஞ்சலில் ஆடுகின்றார். பின்பு சுவாமி பூந்தொட்டியில் மிக அலங்காரமாக வீதிவலம் வருகின்றார். பதின்மூன்றாம் நாள் மாலையில் சுவாமியை யோகநாராயணர் சேவையில் கஸ்தம் பாதச்சாத்துப்படி செய்து இவருடன் கூட ஆதி ஸ்ரீவேங்கடேஸ்வரரையும் அலங்கரித்து இலந்தைவிருட்ச சேவையில் வெளிவீதி வருகின்றார் சுவாமி. பதின்நான்காம் நாள் காலையில் மூலமூர்த்திகளுக்குப் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்றபின் வாகன பூசை நடைபெறும். அன்று மாலையில் ஆஞ்சநேய மூர்த்திக்கு அபிஷேகம் நடைபெறும். அடியார்கள் ஆஞ்சநேயருக்கு வெளிவீதியில் பொங்கல் வைப்பர். உற்சவமூர்த்தி ஆகிய ஆஞ்சநேயரை அலங்காரம் செய்து வெளிவீதியில் உள்ள ஆஞ்சநேயர் கோயிலில் எழுந்தருளப்பண்ணி பூசை நடைபெறும். அப்பொழுது பொங்கல் வைத்து அடியார்களின் பொங்கற் பிரசாதங்கள் யாவும் ஆஞ்சநேயர் முன் படைக்கப்பட்டு நிவேதனம் செய்யப்பட்டு இவருக்கு வடைமாலைகள் சாத்தப்பெற்று சோடசோப உபசார பூசை நடைபெறும். இதன் பின்பு ஸ்ரீ ஆஞ்சநேயர் வீதி வலம் வருவார். இத்துடன் மகோற்சவ விழா நிறைவு பெறுகின்றது. இத் தேவஸ்தானத்தில் உற்சவங்கள் நடைபெறும் வேளையில் உபயகாரரிடம் 'சுவர்ண புஸ்பம்' என்ற பெயரில் தட்சனை பெறப்படுகின்றது.

வைணவ பூசை விதானத்திற்கேற்ப உபயகாரர்களுக்கும் மற்றும் அர்ச்சனை செய்யும் அடியார்களுக்கும், மூலமூர்த்தியின் சந்நிதியின் சட கோபம் என்ற நாமம் உடைய சாமியின் திருப்பாதம் பொருத்தப்பெற்ற முடி அடியவர்களுக்கு சாத்தப்படுகின்றது.

(நன்றி: வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய கும்பாபிஷேக மலர்)

## வெண்ணெய் திருடும் வேங்கடேசன் இன்று வண்ணையில் தேரேறுகின்றான்

இன்று வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேர் உற்சவ நன்னாள். உலகைக் காக்கும் பரம்பொருளாக விளங்குகின்ற ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியானவர், தம்மை வழிபடும் அடியார்களின் துயர்போக்கி அருளாட்சி செய்யும் வரதராஜப் பெருமாளாக எழுந்தருளி வீற்றிருக்கும் புண்ணியதலம் இது.

இன்று தேரேறி வருகின்ற வேங்கடேசப் பெருமாள் தமது அருட் சக்திகளான ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதராக அழகாகக் காட்சியளிக்கும் பொன்மேனிப் பொலிவு காணக் கண் கோடி வேண்டும்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த ஆலயம் யாழ்ப்பாண நகரின் மத்தியில் மணிக்கூட்டு வீதியில், கம்பீரமான ஏழுவாசல் ராஜ கோபுரத்துடன், இருபக்கமும் நாதமெழுப்பும் நல் மணிகளுடன் அழகே உருவாகக் காட்சி தருகின்றது. இனிய பலாமரத் தைத் தல விருட்சமாகக் கொண்டு நாலாபக்கமும் சுற்றுமதில்களுடன் கூடிய இந்த ஆலயமானது பண்டாரவளைச் செட்டிப் பிள்ளைகள் என்றழைக்கப்படும் பத்மசாலச் செட்டிப் பிள்ளைக ளால் பரிபாலிக்கப்பட்டு வைகாசன முறைப்படி கிரியைகள் நடைபெறுகின்றன.

நேரந் தவறாத பூசையுடனும் காலந் தவறாத பக்தர்களின் வழிபாட்டுடனும் மிளிரும் இந்தப் பெருமாள் கோயில், யாழ்ப்பாண மக்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். நேர்த்திகளைப் பூர்த்திசெய்யும் ஆஞ்சநேயர் இங்கே பக்தர்களுக்கு அருளை அள்ளி வழங்கிய வண்ணம் திருக்காட்சி தருகின்றார்.

கற்பூரச்சட்டி ஏந்திவரும் மாதர் கூட்டமும், பஜனை பாடி வரும் பக்தர் குழாமும், ஆனந்தக் கூத்தாடும் அடியவர்களும் புடைசூழ ஸ்ரீமகாவிஷ்ணு சித்திரத் தேரேறிவரும் பக்தி ரசம் ததும்பும் காட்சி நெஞ்சைத்தொடும். கணீர் என்ற மணி ஓசையுடன் ஆடி அசைந்து வரும் ரதம் கண்ணுக்கு விருந்தாக உள்ளத்துக்கு மருந்தாகப் பவனிவரும் இன்றைய புனிதநாள் சிறப்பானதே. அன்புள்ளம் கொண்ட அடியார் வெள்ளத்தின் நடுவே தங்கத் தோணி அசைந்து வருவது போலத் தோன்றும் தேர்த்திருவிழா, மஹோற்சவத்தில் அழித்தலைக் குறிப்பதாகும்.

எனவே, விஷ்ணு பகவான் துஷ்டர்களையெல்லாம் அழித்து தன் அடியார்களைக் காப்பதற்காக இன்று மணித் தேரேறி வருகின்றார். அந்த அழகுப் பவனித் திருக்காட்சியைக் காண ஓடோடி வாரீர் என சேரவாரும் ஜெகத்தீரே என அறைகூவி அழைக்கின்றோம். சித்திரத்தேர் மீது வரும் சிங்காரப் பவனி வண்ணையில் இன்று கண்ணைப் பறிக்கும் களிப்பூட்டும் காட்சியே.

ஆகவே, வெண்ணெய் திருடும் கண்ணன் இன்று வேங்கடேசப் பெருமானாக வண்ணையில் தேரேறி வீதிவலம் வருகின்றார். துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்ய ரதமேறிவரும் அழகுத் திருக்காட்சியைக் காண எமது பூர்வஜென்ம புண்ணியமே வழி வகுக்கும்.

"நாராயணன் நாமம் பாராயணஞ் செய்தால்
நல்வாழ்வுகிட்டும்"

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்வே! அன்று பாரதப் போர் முடித்துப் பாண்டவர்களை ரட்சித்தது போல் இன்று தேரேறி வந்து போரோயச் செய்யவேண்டுமென எல்லோரும் ஒருமித்து ஒரு மனதாகப் பெருமானை வேண்டுதல் செய்து சிந்தித்து வந்தித்துச் சேவித்து அவன் பத்ம மலர்பாதங்களைப் பணிவோமாக.

-சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்.

வண்ணை வேங்கடேசன் அருள் அடியவர்கள் அனைவருக்கும் கிடைப்பதாக.

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)
* விவசாய உற்பத்திப்பொருள்கள், நுகர்ச்சிப்பொருள்கள் என்பவற்றைக் கொழும்பில் கொள்வனவு செய்து கப்பல் மூலமாகத் தருவித்து யாழ். மாவட்டத்தில் உள்ள 24 அங்கத்துவ ப.நோ. கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
* அங்கத்துவ ப.நோ.கூ. சங்கங்களுக்கான இணைந்த சேவையும் பங்களிப்பினையும் வழங்குதல்.
* யாழ்.மாவட்டத்துக்கான அரிசி விநியோகத்தினை மேற்கொள்ளல் போன்ற பல சேவைகளுடன் அதன் அங்கத்துவ சங்கங்களை இணைத்து யாழ். மாவட்டத்தில் முன்னணியில் திகழ்கின்றது.
யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
111, பிரதான வீதி, யாழ்ப்பாணம். T.P. No.: 021 222 2662

அசல் 22 கரட் நகைகளை குறித்த தவணையில் நவீன டிசைன்களில் பெற்றுக்கொள்ள
சிறி நதியா நகைமாளிகை
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சானுயா, சிறிரூபா நகைமாளிகை
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனம்:
சிறி நதியா நகைமாளிகை
இல.56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நம்பிக்கை, நாணயமிக்க தங்கநகைத் தேவைகளுக்கு
கிருஷ்ணா நகை மாளிகை
இல:09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனம்:
கிருஷ்ணா அடகு கடை
இல.370, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

புகைப்படச் சுருள்கள் அனைத்தும் உடனுக்குடன் பிரதியாக்கம் செய்து பெற்றுக்கொள்ள
சுப்பஸோ ஸ்ருடியோ அன் டிஜிற்றல் கலர் லாப்
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Our Services Are
* Marketing of Computers
* Hardware Service, Maintenance Repairing
* Mobile Phones
All Related Repairs Unlocking
Accessories
சகல திருத்த வேலைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்:
MICRO COMPUTERS
349, CLOCK TOWER ROAD, JAFFNA.
(திருத்திக் கொடுத்தபின் உத்தரவாதம் வழங்கப்படும்)

உறுதியான உத்தரவாதம் மிக்க நகைகளுக்கு
நதியா நகைமாடம்
இல.149, 02, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
நதியா நகைமாடம்
இல.99, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கவுசன் மொடன் ஜூவல்லறி
இல.129, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

PC PARADISE IIS COMPUTERS
PC Paradise
61, Clock Tower Road, Jaffna.
Tel.: 021 2229579 T.P.: 0777 271220

புதிய, பழைய படங்கள் விநியோகத்தரும் வெளியிடுபவர்களும்
லக்சன் வீடியோ சென்ரர்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

பல ரகமான உணவு வகைகள் ஓடருக்கு குறித்த நேரத்தில் வழங்கப்படும்.
சுவிஸ் விருந்தகம்
இல.352, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

சித்தி விநாயகர் சைக்கிள் சிற்றி
(யப்பான் சைக்கிள்)
155, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.

மொத்த - சில்லறை விற்பனையாளர்
ஏகாம்பரம் புடைவை மாளிகை
(72)9, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

துர்க்கா நகைப்பூங்கா
71, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பத்திரிகை, பலசரக்கு விற்பனையாளர்
சிவா ஸ்ரோர்ஸ்
59, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

சிறி சிவாஞ்சனா நகையகம்
149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 5481, 9227

க.கு.கந்தையாபிள்ளை அன் சன்ஸ்
பல்பொருள் வியாபார நிலையம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கஜென் மோட்டோர்ஸ்
94, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

அர்ச்சனைப் பொருள்கள், பழவகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
எஸ்.சுதாகர்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையிலான தடகளப் போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன. இந்நிகழ்வில் இடம்பெற்ற கோலூன்றிப் பாய்தல், அஞ்சலோட்டப் போட்டிகளில் ஒருசில முக்கிய கட்டங்களைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# மாவட்ட மட்டத்திலான தடகளப் போட்டிகளில் தெல்லிப்பழை 161 புள்ளிகள் பெற்றுச் சம்பியனானது

## இரு சாதனைகளும் படைக்கப்பட்டன

வலி.வடக்கு,ஒக்.8

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுப் பிரிவு நடத்திய விளையாட்டுப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் ஆண்கள், பெண்கள் பிரிவுகளில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டதுடன், சம்பியன் கிண்ணத்தையும் சுவீகரித்துக்கொண்டது. மாகாண மட்டப் போட்டிக்கும் தெரிவானது.



பி.நேசரூபன்

ஆண்கள், பெண்களுக்கான தடகளப் போட்டிகளில் முறையே 41, 59 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டதுடன் குழுநிலைப் போட்டிகளில் 61 புள்ளிகளுமாக 161 புள்ளிகளைப் பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது தெல்லிப்பழை பிரதேச செயலகம்.

சம்பியன் கிண்ணத்தைப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் வழங்கிக் கௌரவித்தார்.

சண்டிலிப்பாய், கரவெட்டிப் பிரதேச செயலகங்கள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்டன.

பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் விவரங்கள் வருமாறு:

தெல்லிப்பழைப் பிரதேச செயலகம் 161 புள்ளிகள், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் 77 புள்ளிகள், கரவெட்டிப் பிரதேச செயலகம் 60 புள்ளிகள், நல்லூர் பிரதேச செயலகம் 55 புள்ளிகள், பருத்தித்துறை பிரதேச செயலகம் 40 புள்ளிகள், சங்கானைப் பிரதேச செயலகம் 30 புள்ளிகள், கோப்பாய் பிரதேச செயலகம் 30 புள்ளிகள், யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் 27 புள்ளிகள், உடுவில் பிரதேச செயலகம் 18 புள்ளிகள், சாவகச்சேரி பிரதேச செயலகம் 14 புள்ளிகள், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு 8 புள்ளிகள், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு 7 புள்ளிகள், வேலணைப் பிரதேச செயலகம் 5 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன.

இந்த விளையாட்டுப் போட்டியில் இந்தாண்டு இரண்டு புதிய சாதனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பி.நேசரூபன் 2 நிமிடம் 4.1 விநாடிகளில் ஓடி புதிய சாதனையை ஏற்படுத்தியதன் மூலம் 2004ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஜெ. ஜெயதாஸ் ஏற்படுத்தியிருந்த 2 நிமிடம் 5 விநாடிகளில் என்ற சாதனையை முறியடித்துள்ளார்.



என்.மேசி

பெண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த என்.மேசி 20 நிமிடம் 45.1 விநாடிகளில் ஓடி புதியசாதனையை ஏற்படுத்தியதன் மூலம் 2005ஆம் ஆண்டு சாவகச்சேரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த இ.அனுசியா 20நிமிடம் 57.1 விநாடிகளில் என்ற சாதனையை முறியடித்துள்ளார்.

ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டு 15 வருடங்களுக்கு மேலாக காணப்படும் பல சாதனைகள் முறியடிக்கப்படாமல் இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (1-86)

# சண்டிலிப்பாய்க் கோட்ட இறுதியாட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.8

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்திற்கான 14, 16, 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆட்டத்திற்கு வலிகாமம் கல்வி வலய ஓய்வுபெற்ற உடற்பயிற்சி உதவிக் கல்விப்பணிப்பாளர் வி.பாலசிங்கம் கலந்துகொள்வார்.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

### 14 வயதுப் பிரிவு

* மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை.

### 16 வயதுப் பிரிவு

* மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலயம்.

### 18 வயதுப் பிரிவு

* மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

(1-201)

# 14 வயதுப் பிரிவுக்கான உதைபந்தாட்டம்; சாள்ஸை வென்று சம்பியனானது சென்றல்

வலி.வடக்கு,ஒக்.8

யாழ்ப்பாணம் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 14 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கோட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.சாள்ஸ் மகாவித்தியாலயமும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணியினரும் போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை தாம் சமவலிமை மிக்கவர்கள், ஓர் அணிக்கு மற்ற அணி சளைத்தவர்கள் இல்லையென்ற நிலையில் மிகவும் விறுவிறுப்பாக விளையாடினார்கள்.

இரு அணிகளுமே தாங்கள் கோல்கள் பெறும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டதுடன் எதிரணியினர் கோல்கள் பெறுவதற்கான வாய்ப்பை வழங்காது சாதுரியமாக விளையாடினார்கள்.

ஆட்ட இறுதி வரை இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெற்றுக்கொள்ளாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதனை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உரிய முறையில் பயன்படுத்தி 3:2 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் சென்.சாள்ஸ் மகாவித்தியாலயத்தை வெற்றி பெற்றுக் கோட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (1-86)

# விறுவிறுப்பான தாச்சி இறுதியாட்டத்தில் கேடயம் தாவடி காளியம்பாள் கழகத்துக்கு

வலி.வடக்கு,ஒக்.8

யாழ்.மாவட்டச் தாச்சிச் சங்கம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்திய தாச்சிச் சுற்றுப்போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகமும் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.


போட்டி விறுவிறுப்பாக ஆரம்பமாகிய போதிலும் சில நிமிடத்தில் காளியம்பாள் விளையாட்டுக் கழக வீரர்களின் கை மேலோங்கிக் காணப்பட்டது.

முதல்பாதி ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் 3 பழங்களை பெற்ற நிலையில் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

சுதுமலை புவனேஸ்வரியம்பாள் விளையாட்டுக் கழகம் பழம் பெற முயன்றபோதிலும் அதனைக் கைகூட விடாது காளியம்பாள் விளையாட்டுக் கழகம் தொடர்ந்து தடுத்து நிறுத்தி வந்தமையால் பழங்கள் எதனையும் பெறமுடியவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் முழுமையாக மைதானத்தில் ஆதிக்கம் செலுத்தி மீண்டும் 4 பழங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

ஆட்ட முடிவில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் 7:0 என்ற பழங்கள் கணக்கில் சுதுமலை புவனேஸ்வரியம்பாள் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று இந்த ஆண்டுக்கான தாச்சிச் சங்கத்தின் சம்பியன் அணியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (1-86)




# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஒக்.8

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்று வரும் 14, 16, 18 வயதுப் பிரிவினர்களுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

### 14 வயதுப் பிரிவு

* கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் எதிர் அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
* திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம் எதிர் கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்.

### 16 வயதுப் பிரிவு

* யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எதிர் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.
* கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் எதிர் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம்
* நல்லூர் கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரி எதிர் கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்.

### 18 வயதுப் பிரிவு

* திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம் எதிர் நல்லூர் கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரி.
* கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(1-86)

# யாழ்.வலயப் பாடசாலைகளின் சதுரங்கப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.7

யாழ்.கல்வி வலயம் நடத்திய சதுரங்கச் சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:

### தரம் 04 தனிநபர் போட்டிகள்

**ஆண்கள்:** சுகுமார் செந்தூரா - (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), ஞானசேகரம் அனோஜன் - (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), குக தாஸ் சாருஜன் - (யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்).

**பெண்கள்:** வித்தியா நவரத்தினசிங்கம் (யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), லாவண்யா யோகேஸ்வரன் (இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), ஆதித்தியா [illegible] (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை).

### தரம் 05 குழுப்போட்டிகள்

**ஆண்கள்:** யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

**பெண்கள்:** யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, கோப்பாய் நாவலர் வித்தியாலயம், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

### 13 வயது கீழ்

**ஆண்கள்:** சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

**பெண்கள்:** கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், யாழ்.இந்து மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

(202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

**மதுரம் இன்ஸ்ரிரியூட்டில்**

கல்வி கற்ற எமது குழந்தைகளான





இ.துளசிகா - 151 ப.மிஷாந் - 145 நீ.தர்மினி - 129





தே.டிலாசிகா - 124 கோ.பிரபாலினி - 122 க.ஆதித்தன் - 120





யோ.கோகிலதீபன் - 119 யோ.சுலோஜனா - 116 ஜெ.யாழினி - 114

இவர்களையும் 75 புள்ளிகளுக்கு மேல் பெற்ற ஏனைய குழந்தைகளையும் பாராட்டி வாழ்த்துவதோடு, இவர்களுக்கு கல்வி வழிகாட்டிய நிறுவன அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுதலையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதோடு, நிறுவனம் மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

(79073) **பெற்றோர்கள்.**


# நவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.8

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் வாணிவிழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு எஸ்.கே.சண்முகலிங்கம் தலைமையில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக புங்குடுதீவு சிவநெறிக்கழகத்தின் தலைவர் ந.இராசதுரை, இளைப்பாறிய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.தவராசா ஆகியோர் கலந்து கொள்வர். (201)

* * *

இளவாலை மாரீசன்கூடல் றோ.க.த.க.பாடசாலையின் வாணிவிழா இன்று புதன்கிழமை அதிபர் தலைமையில் நடைபெறும். (201)

* * *

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வாணி விழா இன்று புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு மன்ற மண்டபத்தில் நடைபெறும். (201-207)

* * *

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் வாணி விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும். (201-207)

* * *

யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்தின் விலங்கியற் துறையில் இன்று புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு வாணிவிழா நடைபெறவுள்ளது. (202-119)

* * *

புத்தூர், ஒக்.8

புத்தூர் கிழக்கு விக்கினேஸ்வரா முன்பள்ளியின் வாணி விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி முன்றலில் நடைபெறவுள்ளது.

வலி. கிழக்கு பிரதேசசபைச் செயலாளர் எஸ்.நடராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். அன்றைதினம் முன்பள்ளிக் கட்டடமும் திறந்து வைக்கப்படும். (201)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



2008ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 123 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த

**செல்வன் புலேந்திரன் ரெனோஜன்**

(யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்)

அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் மேன்மேலும் சகல கலைகளிலும் உயர ஆலடி முருகனை வேண்டி நிற்பதுடன் அவரது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், குகன் கல்வி நிறுவனம் ஆகியோருக்கு நன்றி கூறுகின்றோம்.

வாழ்த்துவோர்:

**அப்பா - புலேந்திரன், அம்மா - குமரகலா, அக்காமார், அண்ணா.**

"குமரகம்"
ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர். (79096)



# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தேரோட்ட உற்சவம்

புதுப்பிக்கப்பட்ட தேர் ஓட்ட விழாவின் முன்னோடியாக அப் புதுப்பிக்கப்பட்ட தேர் **பரீட்சிப்பு வெள்ளோட்டம்** நாளை 9ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் இடம்பெறும். அப்பொழுது ஆசாரிகள் கௌரவிப்பு, தேர் வீதி வலம் உட்பட நடைபெறவுள்ள கிரியைகளில் கலந்து கொள்ளும்படி அடியார்களை நிர்வாக சபையினர் வேண்டி நிற்கின்றனர்.

துன்னாலை வடக்கு,
புலோலி. (சி/555032) அறங்காவலர் சபை.


# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

# கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:
08.10.2008- 17.10.2008 பி.ப.2.00 மணி வரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:
20.10.2008 நண்பகல் 12.00 மணி வரை

கேள்வி திறந்து பார்க்கும் திகதி:
20.10.2008 பி.ப.2.00 மணி

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|
| 01. புன்னாலைக்கட்டுவன் தம்பிப்பிள்ளை மணியகாரன் வீதி திருத்த வேலை | 25000.00 | 575.00 | M8 |
| 02. இணுவில் சந்தை தெற்கு புற மதில் அமைத்தல் | 10000.00 | 575.00 | M8 |
| 03. மருதனார்மடம் சந்தை தெற்கு, மேற்கு மதில் அமைத்தல் | 35000.00 | 575.00 | M8 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் குறிக்கப்பட்ட "இக்ராட்" தரத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதி "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கும் அதன் பிரதியை "**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்**" என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி ச.சொக்கலிங்கம்
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம். 06.10.2008 (சி/555033)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 06 * 04 * 1946

இறப்பு 20 * 09 * 2007

# சின்னத்தம்பி செல்லத்துரை

**திதி: நவமி (08.10.2008)**

ஆண்டு ஒன்று ஆகிடினும்
ஆறிடுமோ எங்கள் மனம்
நீங்கள் இல்லாத வாழ்வினை
நினைத்துப் பார்க்க முடிகிறதா?
துன்பக் கடலில் மூழ்கியே துவண்டு
துடிக்கின்றோம் துன்பங்கள் களைந்திடவே
துடுப்பாய் எங்களை வழிநடத்தும்
எம் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

கோட்டக்காடு,
கரணவாய் மேற்கு, கரவெட்டி. குடும்பத்தினர். (79072)



# மரண அறிவித்தல்

## செல்லையா சிவதாசன்

குப்பிளான் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவதாசன் (பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் கிளை முகாமையாளர்) நேற்று (07.10.2008) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் செல்லையா- இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் கதிரவேல்- இராஜேஸ்வரி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற சந்திரபோஸ், புஸ்பராணி ஆகியோரின் சகோதரரும் குலமணிதேவி, காலஞ்சென்ற பன்னீரானந்தன், சுந்தானந்தன், நித்தியானந்தன் (கிராம சேவகர்), சிவானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் சிவறஜனி (கனடா), மதனமோகனராஜ் (ஆசிரியர் யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.வி.), சிவசக்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்பழகன் (கனடா), ஜெயந்தி (நிகழ்ச்சித் திட்டமிடல் உதவியாளர், பிரதேச செயலகம், சங்கானை), பகீரதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் நிரேஷ், அர்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**சி.மதனமோகனராஜ்**
(ஆசிரியர், யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.வி.).

குருந்தடி வளவு,
குப்பிழான் வடக்கு,
குப்பிழான். (சி/555031)



# COMPUTER EXPRESS
## Institute of Information Technology

No 167, Kasthuriyar Road, Jaffna.
Phone : 021 2228250, 0777 222422 Website : www.ceiit.info email : info@ceiit.info

A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2008** 80% off

- Diploma in Computer Science ~~[illegible]~~ 2,150 4 Months
- Honours Dip in Computer Science ~~[illegible]~~ 2,600 5 Months
- Diploma in Web page Designing ~~[illegible]~~ 2,150 4 Months
- Diploma in Graphic Designing ~~[illegible]~~ 2,150 4 Months
- Diploma in Desktop Publishing ~~[illegible]~~ 2,000 4 Months
- Dip in Hardware Engineering ~~[illegible]~~ 2,000 3 Months
- Diploma in Microsoft Office 1,500 3 Months
- Dip in Auto CAD 2,000 3 Months
- Accounting Package 2,150 2 Months

50% OFF

- Diploma in Multimedia ~~5,500~~ 2,750
- Diploma in Video Editing ~~6,500~~ 3,250
- Diploma in Networking ~~10,000~~ 5,000

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் பொருத்தமான கற்கை நெறியை தேர்ந்தெடுத்து விடுமுறைகாலத்தை பயனுடையதாக்கிகொள்ளுங்கள்.

ஆரம்பம் :
Batch I : 10/10/2008 { 09AM 02PM
Batch II: 11/10/2008 { 11AM 02PM
Batch III: 12/10/2008 { 11AM 02PM
Batch IV: 15/10/2008 { 09AM 02PM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்காகப் போராட முதல்வர் முன்வந்தால் படைதிரட்டிக் களமிறக்குவேன் என்கிறார் சரத்குமார்



சென்னை, ஒக்.8

ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் சுமுகத் தீர்வு காண்பதற்கு தமிழக அரசியல் கட்சிகள் தனித்தனியாகப் போராடுவது பயனற்றது - என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமார் கூறியுள்ளார்.

இலங்கையில் நமது தொப்புள் கொடி உறவுகளைக் காப்பாற்ற தமிழக முதலமைச்சர் தனது அதிகார ஆசைகளை தவிர்த்தும், அவற்றிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டும், தமிழ் இனம் வாழ களம் இறங்கி போராட முன்வந்தால் அதற்கு சமத்துவ மக்கள் கட்சி துணை நிற்கும். அதற்காக அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவையும் திரட்டி களம் இறங்குவேன் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இதுகுறித்து ஆர்.சரத்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில்கூறியிருப்பவைவருமாறு:-

தமிழினப் போராளிகளை வேரறுப்போம் என்று சூளுரைத்து இலங்கை இராணுவம் நடத்தும் இராணுவத் தாக்குதல்களால் அங்கு வாழ்கின்ற ஒட்டுமொத்தத் தமிழ் இனத்தையே கருவறுக்க முயலும் படுபாதக செயலுக்கு, மறைமுகமாக இந்திய அரசும் துணை போகிறதோ என்ற வெகு நாளைய சந்தேகம், இந்திய இராணுவ அதிகாரிகள் இருவர் புலிகளின் தாக்குதலில் படுகாயமுற்ற சமீபத்திய நிகழ்வால் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இலங்கையின் உள் விவகாரங்களில் இராணுவத்தின் அழித்தொழிப்பு நடவடிக்கைக்கு இந்திய அரசு ரகசியமாக உதவி வருவது வெட்ட வெளிச்சமாகி விட்ட நிலையில் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் தனித்தனி அணிகளாக போராடுவது பயனற்றது என்பதே எங்கள் கட்சியின் கருத்து.

கடந்த 19.12.2006 அன்று தமிழக முதலமைச்சருக்கு நான் எழுதிய கடிதத்திலேயே ஈழப் பிரச்சினையின் தன்மையை புரிந்து கொண்டு, உள்ளார்ந்த உணர்வோடு இனப்பிரச்சினையைத் தீர்த்திட குழுவொன்றை அமைக்க வேண்டும். அக்குழு இலங்கை சென்று இலங்கை அரசோடும், தமிழ் இனப் போராட்ட அமைப்புகளோடும் பேச்சு நடத்துவதற்கு இந்திய அரசின் அனுமதியைத் தமிழக முதலமைச்சர் பெற வேண்டும். மேலும் அக்குழுவில் நானும் பங்கேற்பதற்காக தயாராகவே உள்ளேன் என்பதையும் தெரிவித்திருந்தேன்.

உடனடியாக தமிழக முதலமைச்சர், மத்திய அரசை நிர்ப்பந்தித்து, இலங்கையில் நடைபெற்று வரும் இராணுவத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்திடவும், திறந்த மனதோடு, சுமுக பேச்சுகளை இந்திய அரசே முன்னின்று தொடங்கிடவும், இலங்கை அரசைக் கடுமையாக வலியுறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (அ-ஒ)

## 3 மருத்துவர்களுக்கு நோபல் பரிசுகள்

2008 ஆம் ஆண்டுக்கானமருத்துவநோபல் பரிசு ஜேர்மனியைச் சேர்ந்த ஹரால்டு ஹெளசேன், பிரான்ஸைச் சேர்ந்த சினோசி, மான்டகேனீர் ஆகியோருக்குவழங்கப்பட்டுள்ளன.

எச்.ஐ.வி. வைரசைக் கண்டுபிடித்ததற்காக பிரான்ஸ் விஞ்ஞானிகளுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. பெண்கள் மத்தியில் அதிகமாகக் காணப்படும் புற்றுநோய்க்கான காரணத்தைக் கண்டறிந்ததற்காக ஜேர்மன் விஞ்ஞானி இந்த விருதை பெற தேர்வு செய்யப்பட்டுள்ளார். சுவீடனைச் சேர்ந்த ஆல்பிரட் நோபலால் நிறுவப்பட்ட நோபல் பரிசுகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. (அ-ஒ)

# பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல் 30பேர் உயிரிழப்பு; 60பேர் படுகாயம்

## எம்.பியின் வீட்டருகே சம்பவம்

இஸ்லாமாபாத், ஒக்.08

பாகிஸ்தான் எம்.பி.ரஜீத் அக்பர் நவானியின் இல்லத்திற்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில், 30 பேர் கொல்லப்பட்டனர். அறுபதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். ரஜீத் அக்பர் சிறு காயங்களுடன் தப்பினார் என பாகிஸ்தான் பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

பக்கார் மாவட்டத்தைச் சேர்ந்த எம்.பி. அக்பர் நவானி, நவாஸ் ஷெரீப்பின் முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்தவர். இவரது இல்லத்தில் ஆதரவாளர்கள் திரண்டிருந்தனர். பல்வேறு விவகாரங்கள் தொடர்பான கருத்துப் பரிவர்த்தனைகள் இடம் பெற்றுக் கொண்டிருந்தன. அச்சமயம் குண்டு வெடித்தது என நேரில் கண்ட ஒருவர் குறிப்பிட்டார்.

அக்பர் நவானி கருத்துப் பரிவர்த்தனைகள், கலந்தாலோசனைகள் ஆகியவற்றிற்கு மத்தியிலும், வந்து கொண்டிருந்தோருக்கு ஈத் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டிருந்தார். அவரது இல்லத்துக்கு அருகில் ஒரு வாலிபர் திடீரென வந்தார். இதையடுத்து பாரிய சத்தத்துடன் குண்டொன்று வெடித்தது என நேரில் அவதானித்துக் கொண்டிருந்த எம்.பி.யின் உதவியாளர் கூறினார்.

தற்கொலைக் குண்டுதாரி ஆப்கானிஸ்தானிலிருந்து வந்த தலிபான் தீவிரவாதியாக இருக்கலாம். அவர் ஒரு பாகிஸ்தானியர் அல்லர். இத்தாக்குதல் தொடர்பாக, விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தாக்குதலுக்கு இதுவரை எந்த ஓர் அமைப்பும் உரிமை கோரவில்லை என பக்கார் மாவட்ட பொலிஸ் அதிபர் தெரிவித்தார். (அ-ஒ)

# உலக டென்னிஸ் தரவரிசையில் லியாண்டர் பயஸ் முன்னேற்றம்

சென்னை, ஒக்.08

உலக டென்னிஸ் ஆண்கள் இரட்டையர் பிரிவு தரவரிசைப் பட்டியலில் இந்திய வீரர் லியாண்டர் பயஸ் 2 இடங்கள் முன்னேறி 6ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

செக் குடியரசு வீரர் லூகாஸ் டிலோகியுடன் ஜோடி சேர்ந்துள்ள அவர், சமீபத்திய போட்டிகளில் சிறப்பாக விளையாடி அசத்தி வருகிறார். தாய்லாந்து ஓபன் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற பயஸ் - லூகாஸ் ஜோடி, அடுத்து டோக்கியோவில் நடந்த ஜப்பான் ஓபன் போட்டியில் இறுதிப் போட்டி வரை முன்னேறியமை குறிப்பிடத்தக்கது.

உலக தரவரிசையில் பயஸ் 3 ஆயிரத்து 60 புள்ளிகளுடன் 6ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ள நிலையில் மற்றொரு இந்திய வீரரான மகேஷ் பூபதி தொடர்ந்து 12ஆவது இடத்தில் நீடிக்கிறார். (அ-ஒ)

# கருணா எம்.பியானதை ஆட்சேபித்து ஜே.வி.பி. அடிப்படை உரிமை மீறல் மனு

கொழும்பு, ஒக். 08

ஆளும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) நியமிக்கப்படுகிறார் என வெளிப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தலை ஆட்சேபித்து, ஜே.வி.பி. நேற்று உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கின்றது.

ஜே.வி.பியின் சார்பில் அதன் செயலாளர் ரில்வின் சில்வாவே இந்த மனுவை உயர்நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்திருக்கின்றார்.

மனுவில் எதிர்மனுதாரர்களாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் சுசில் பிரேமஜயந்த, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, முரளிதரன், சபாநாயகர் லொக்குபண்டார, தேர்தல் ஆணையாளர், சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஜே.வி.பியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான வசந்த சமரசிங்க, மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தமது பதவியை இராஜிநாமாச் செய்ததால் ஏற்பட்ட வெற்றிடத்துக்குப் பின்னர் அவரையே மீளவும் அப்பதவிக்கு நியமிக்குமாறு ஜே.வி.பி. கேட்டுக்கொண்டது என்றும் -

எனினும் அதனைப் புறக்கணித்து அந்த இடத்துக்கு முரளிதரனை எம்.பியாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நியமித்துள்ளது என்றும் -

இது, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக ஸ்ரீ.ல.சு.க. மற்றும் ஜே.வி.பி. செய்துகொண்ட எழுத்துமூல உடன்பாட்டுக்கு முற்றிலும் மாறானது என்றும் -

எனவே, முரளிதரன் எம்.பியாக நியமிக்கப்படுகிறார் எனத் தெரிவிக்கும் வர்த்தமானி அறிவித்தலின் செயற்படு தன்மையை இடைநிறுத்தும் உத்தரவை விடுக்க வேண்டும் என்றும்-

அந்தத் தேசியப் பட்டியல் எம்.பி. பதவிக்கு வசந்த சமரசிங்கவை நியமிக்குமாறு கட்டளை பிறப்பிக்கும்படியும் -

மனுதாரர் தமது மனுவில் கோரியுள்ளார். (அ-சி)

## துயர் பகிர்வு



எமது நிறுவன ஆசிரியர் திரு ந.தவேந்திரராசா அவர்களின் பாசமிகு தாயார்

அமரர்

**நாகமணி தவமலர்**

அவர்கள் இறைபதம் அடைந்தமையை இட்டு அவர்களின் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

The Express Institute
Irupalai, Kopay.

கல்விச் சமூகத்தினர்.

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் சோபனம்



யாழ்ப்பாணம், நல்லூரடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சோபனம் நேற்று (07.10.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரைராசாவின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மயில் வாகனத்தின் அன்பு மனைவியும், ரவீந்திரன் (பிரான்ஸ்), வசந்தமல்லிகாதேவி (இத்தாலி), செல்வேந்திரன் (டென்மார்க்), இராசமல்லிகாதேவி (நல்லூர்), ராசேந்திரம் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயும், கமலாதேவி, கருணாநிதி, தவாயினி, தவராசா, ரஜனி ஆகியோரின் அன்பு மாமியும், ஜனனி, கஸ்தூரி, மயூரி, கடோக்கயன், அபிஷா, அபிராமி, அனுசன், சிந்துஜா, அபிஷேக், ரம்மியா, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2008) புதன்கிழமை பி.ப. 1 மணியளவில் கச்சேரி நல்லூர் றோட்டிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

92, கச்சேரி நல்லூர் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
(தவராசா - மருமகன்).

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை
செல்வி வரதவாணி அவர்களது
அன்புத் தந்தை

**சு.திருச்செகநாதன்**

அவர்கள் 06.10.2008 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தமையை யிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/மகாஜனக் கல்லூரி,
ஆசிரியர் கழகம்.

## மரண அறிவித்தல்கள்

### புவனேஸ்வரியம்மா முத்துக்குமாரு

பருத்தித்துறை கற்கோவளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரியம்மா முத்துக்குமாரு நேற்று (07.10.2008) மாலை இறைவன் பாதாரவிந்தங்களை அடைந்து விட்டார்.

அன்னார் திரு திருமதி வைரமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் திருமலையைச் சேர்ந்த திரு திருமதி சின்னையா தம்பதியினரின் மருமகளும் முத்துக்குமாருவின் மனைவியும் திருமதி பாக்கியம், சோமசுந்தரம், துரைசிங்கம், தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்பு உடன்பிறப்பும் திருமதி சாரதாமணி, திருமதி ருக்குமணி, விஜயகுமார்(U.K), கண்ணகுமார் (ஆசிரியர் குடத்தனை A.M.T பாடசாலை), திருமதி விஜயகலா, திருமதி மாலதி, கிருஸ்ணகுமார், வசந்தகுமார் (U.K), திருமதி பாமா ஆகியோரின் பாசமிகு அன்னையும் காலஞ்சென்ற சிவசோதி, தனபாலசிங்கம் (வல்லிபுர ஆழ்வார்ஆதிமூல இலட்சுமிநாராயண அமுதசுரபி அன்னதான சபைத் தலைவர்), திருமதி ஜெயக்குமாரி (U.K), திருமதி புஸ்பமாலா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய்), சிவகணேசன் (டோகா), சுரேஸ்குமார், திருமதி தீபா, மாணிக்கராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் வசிதா, சசிதா, ரதீஸ், தனபாலகிருஸ்ணன் (சுவிஸ்), பானுமதி, கோமதி, யாழினி, நவநீதன், ஜனார்த்தனன் (U.K), சங்கரதாசன், கருணிகா, மதிராஜி, வாகினி, கிருசாளினி, பிருந்தன், டேனுகா ஆகியோரின் பிரியத்துக்குரிய பேர்த்தியாரும் ஐஸ்வினி, சுகனியா, சுயந்தினி, சர்மினி ஆகியோரின் ஆசைப் பூட்டியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2008) நண்பகல் ஒருமணியளவில் கற்கோவளத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை கோரியடி மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கற்கோவளம்,
பருத்தித்துறை. (78068)

தகவல்:
குடும்பத்தினர்

### செல்லையா சிவதாசன்

குப்பிளான் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவதாசன் (பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் கிளை முகாமையாளர்) நேற்று (07.10.2008) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (9.10.2008) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காடாகரம்பை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருந்தடி வளவு,
குப்பிழான் வடக்கு,
குப்பிழான்.

தகவல்:
சி.மதன மோகனராஜ்
(ஆசிரியர், யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.வி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறை படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்,

## கிளிநொச்சி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்பட்டவை வருமாறு:

படையினரின் இந்த முன்நகர்வு நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலின் போது 20க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்திருக்கின்றனர். கொல்லப்பட்ட படையினரின் மூன்று சடலங்களையும் மற்றும் ஆயுத தளபாடங்களையும் கைப்பற்றினோம்.

இதேவேளை, வன்னி விளாங்குளம் பகுதியில் படையினர் நேற்றுக் காலை பெருமெடுப்பில் முன்நகர்வினை மேற்கொண்டனர். இந்த முன்நகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் தீவிர தாக்குதல்களை நடத்தி படையினருக்கு இழப்புகளை ஏற்படுத்தி முறியடித்தனர்.

இதேவேளை, நேற்றுக்காலை வன்னேரிக்குளம் பகுதியில் படையினர் செறிவான ஷெல் தாக்குதல் மற்றும் வான்படையின் தாக்குதல் உதவியுடன் முன்நகர்வு நடவடிக்கையினை மேற்கொண்டனர். இந்நடவடிக்கைக்கு எதிராகவும் விடுதலைப் புலிகள் முறியடிப்புத் தாக்குதலைநடத்தினர் - என்றுள்ளது.

இதே வேளை-

கிளிநொச்சி அக்கராயன் குளம் பகுதியில் நேற்றுக் காலை 7.30மணிக்கும் அதன் பின்னர் பிற்பகல் 1.35 மணிக்கும் விமானப்படையின் எம்.ஐ.24 ரக தாக்குதல் ஹெலிகொப்டர்கள் விடுதலைப்புலிகளின் பலமான முன்னரங்குகள் மீது தாக்குதல் நடத்தின என்று பாதுகாப்பு அமைச்சின் ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

களத்தில் முன்னேறிக்கொண்டிருக்கும் 57ஆவது படையணியினர் மீது கடும் தாக்குதலை மேற்கொண்டு வரும் விடுதலைப் புலிகள் மீது ஹெலிகள் தாக்குதல் நடத்தின. அதில் எமக்கு பெரும் வெற்றி கிட்டியது. படையினர் நேற்று முன்தினம் ஆரம்பித்த நடவடிக்கை நேற்றும் தொடர்ந்தது. புலிகளுக்கு பலத்த இழப்பு எற்படுத்தப்பட்டுள்ளது - என்றும் ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (அ-01-சி)

## புலிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் நேற்று முன்தினம் இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் பாலித கனேகொடவை அழைத்து இலங்கையில் இடம்பெற்றுவரும் மோதல்களினால் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவது தொடர்பாக இந்தியாவின் அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

எனவே, இவ்விடயம் குறித்து நேற்று நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு போகொல்லாகம உரையாற்றினார்.

அதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவுடன் நெருங்கிய உறவையும் அடிக்கடி தொடர்புகளையும் கொண்டுள்ளோம். பரஸ்பர நல்லெண்ணம் மற்றும் நம்பிக்கையை பேணுவதில் நீண்டகால மாக ஒரே அணியில் உழைத்து வருகிறோம்

அதே வேளை பொதுமக்களின் மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் மிகுந்த அக்கறையுடன் செயற்படுகிறோம்.

இலங்கை அரசு, மோதல் இடம்பெற்றுவரும் பிரதேசங்களில் உள்ள சகல மக்களினதும் மனிதாபிமான நலன்களில் மிகவும் அக்கறையாக இருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தைப் புலிகளிடம் இருந்து விடுவித்தபோது படையினருக்கு சிவிலியன்களின் உச்சக் கட்டப் பாதுகாப்பு குறித்து எவ்வாறு அறிவுறுத்தல்களை வழங்கி அவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோ, அதேபோன்றே வடக்கையும் புலிகளிடம் இருந்து விடுவிக்கும் மனிதாபிமான நடவடிக்கையிலும் அரசு, சிவிலியன்களின் பாதுகாப்புக் குறித்து அதே கொள்கையினை கடைப்பிடித்து வருகின்றது.

புலிகளாலும் அவர்களது ஆதரவாளர்களாலும் மேற்கொள்ளப்பட்டுவரும் விசமத்தனமான பிரசார வலையில் இலங்கையின் நண்பர்கள் சிலரும் சிக்கியுள்ளனர்.

தமிழ்மக்களுக்குத் தேவையான, போதியளவு உணவு மற்றும் மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்கு ஐ.நா அமைப்புக்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுடன் சேர்ந்து நாம் உழைக்கிறோம். அவை பாதுகாப்பாகச் சென்றடைவதையும் நாம் நிச்சயப்படுத்திக்கொள்கிறோம்.

மோதல் பிரதேசங்களில் உள்ள மக்களின் மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசினால் தற்போது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

புலிகளுக்கு எதிராக அரசு மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளைச் சரியான கண்ணோட்டத்தில் நோக்க வேண்டும். புலிகளைத் தவறாக தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனக் கருதக்கூடாது.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை தமிழ்ச் சகோதர மக்களுக்கு எதிரான நடவடிக்கையாக நோக்கக் கூடாது.

தமிழ் மக்களின் நலன்களில் அக்கறை உடைய நாம் அவர்களுடன் ஒன்றாக இணைந்து அவர்களின் நலன்கள், பாதுகாப்பு மற்றும் அபிலாஷைகளை உறுதி செய்ய முனைப்புடன் செயற்படுவோம் - என்றார்.

## குடாநாட்டின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் நிலைமை குறித்து கேட்டறிந்தார். யாழ். மாவட்டத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி குடாநாட்டின் தற்போதைய நிலமை தொடர்பாக விளக்கிக்கூறினார்.

அதன் போது களமுனைத் தளபதிகள் பொன்சேகாவிடம் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் சட்டம் ஒழுங்கைப் பேணுவதுடன் மக்களுடன் சிவில் நிர்வாகங்கள் தொடர்பாக நல்ல உறவுகளைப் பேணி வருகின்றோம்.

பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னிலைப் படுத்தும் அதேநேரம் பொதுமக்களின் நடமாட்ட வசதிகளை மேலும் விருத்தி செய்வதற்கு பல தளர்வுகளைச் செய்துள்ளோம்- என்று தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள் குடாநாட்டுக்குள் ஊடுருவி நாசம் விளைவிப்பதைத் தடுக்கும் வழிவகைகள் குறித்தும் நேற்றைய விஜயத்தின் போது விரிவாக ஆராயப்பட்டது.

பாதுகாப்புப் படையினரின் செயற்பாடுகளைப் பாராட்டிய தளபதி எதிர்காலத்தில் பாதுகாப்பு மற்றும் பொதுமக்களுடனான உறவு ஆகியன தொடர்பாக சில ஆலோசனைகளையும் களமுனைத் தளபதிகளுக்கு வழங்கினார் என்று இராணுவத்தரப்பின் இணை யத்தளம் விவரித்துள்ளது. (அ-1)

## அவசரகாலச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக 98 வாக்குகளும், எதிராக 14 வாக்குகளும் அளிக்கப்பட்டன. அரசுடன் இணைந்து தேசிய சுதந்திர முன்னணி பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தது.

வாக்களிப்பின்போது ஐ. தே. கட்சி மற்றும் ஜே. வி. பி. ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருக்கவில்லை.

இதேவேளை, ஐ. ம. ச. முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) அரசுடன் இணைந்து பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தார்.

## ஜே.வி.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் கருணா சத்தியப்பிரமாணம் செய்து முடியும் வரை சபை அமர்வைப் பகிஷ்கரித்தனர். சத்தியப் பிரமாணம் முடிவுற்றதும் சபைக்கு வந்தனர்.

## வன்னியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டனர். மேலும் ஆறுபேர் வரை படுகாயமடைந்தனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

இக்கிளைமோர் தாக்குதலை அரசு படையினரின் ஆழ ஊடுருவும் அணியினரே மேற்கொண்டனர் என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

புளியங்குளத்தில் இருந்து புதுக்குடியிருப்பை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பஸ்ஸே இக்கிளைமோர் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

படுகாயமடைந்தவர்கள் உடனடியாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். (அ-சி)

## பிரிட்டன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டன் அரசு நடவடிக்கையெடுக்க வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இலங்கை அரசின் விமானத் தாக்குதல் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவும் விடயத்தில் இராஜதந்திர நடவடிக்கைகளுக்காக காத்திருப்பதை விடுத்து பிரிட்டன் அரசு உடனடியாகச் செயற்பட வேண்டுமென்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

பிரிட்டனின் தொழிற்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோன் மக்டொனெல், விஜேந்திரா சர்மா போன்றவர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். தமிழ் மக்களின் உணர்வலைகளை தாமும் பகிர்ந்து கொள்கின்றனர் என அவர்கள் தெரிவித்தனர்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு நேரடியாக உதவுமாறு பிரிட்டன் அரசைத் தாங்களும் கேட்டுக் கொள்கின்றனர் என அவர்கள் குறிப்பிட்டனர். (சி)

## போரினால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்திரேலிய அரசு தனது மனிதாபிமான உதவிகளைத் தொடர்ந்தும் சர்வதேச அமைப்புகள் ஊடாக வழங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள் ளவை வருமாறு:-

இலங்கையில் வன்முறைகள் அதிகரிப்பது குறித்தும் வடபகுதியில் தீவிரமடையும் மோதல் காரணமாக ஏற்பட்டுள்ள மனிதாபிமான விளைவுகள் குறித்தும் ஆஸ்திரேலியா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

இலங்கை அரசு தனது தேசிய பகுதி மீதான கட்டுப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சர்வதேச விதிமுறைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுப்பதற்கு அதற்குள்ள உரிமையை ஆஸ்திரேலியா அங்கீகரிக்கின்றது.

இதேவேளை பொதுமக்களுக்கு உயிரிழப்பு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கும் மோதல் காரணமாக ஏற்பட்டுள்ள மனிதாபிமானத் துயருக்கு தீர்வுகாண்பதற்கும் இலங்கை அரசு சகல முயற்சிகளையும் எடுக்க வேண்டும்.

இலங்கையில் ஆபத்தான நிலையில் உள்ள மக்களுக்கு ஆதரவளிப்பதில் ஐக்கிய நாடுகளும் ஏனைய மனிதாபிமான அமைப்புகளும் முக்கிய பங்காற்றுகின்றன. இந்தப் பங்களிப்பு தொடர்ந்தும் முக்கியமானதாகவுள்ளது.

மோதலால் பாதிக்கப்பட்ட, இடம்பெயர்ந்த பெருமளவு இலங்கை மக்களின் நலன்களுக்கு ஆதரவளிப்பதற்காக அரசு இவற்றுடன் சேர்ந்து பணியாற்றுவது அவசியம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜானக...

(முதலா பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் வலியுறுத்தினார்.

இலங்கைப் பொலிஸாரின் விசாரணை மீது நம்பிக்கை வைக்க முடியாது என்றும் அவர் சொன்னார்.

மேற்படி குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு உரையாற்றியபோது ரணில் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஜானக பெரேராவுக்கு உரிய முறையில் பாதுகாப்பு வழங்கப்படாமையே அவர் கொல்லப்பட்டமைக்குக் காரணம். இவருக்கு புலிகளிடமிருந்தும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளிடமிருந்தும் கொலை அச்சுறுத்தல் உள்ளது என்று நாம் பாதுகாப்பு அமைச்சிடம் தெரிவித்திருந்தோம்.

அந்த விடயம் அரசால் கவனத்தில் எடுக்கப்படாததால் நாம் நீதிமன்றம் சென்று முறையிட்டோம். ஆனால் ஜானக பெரேராவுக்கு கொலை அச்சுறுத்தல் ஏதும் இல்லை என்று பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார்.

ஜானக ஒரு சாதாரண மனிதர் அல்லர். அவர் நாட்டைப் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கப் பாடுபட்டவர்.

இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற பின்பும் அவர் படையினரை ஊக்கப்படுத்தி வந்தார். அவர் செய்த அர்ப்பணிப்புக்கள் அதிகம்.

மரணித்தவர்களினதும் காயமடைந்தவர்களினதும் எண்ணிக்கையை அறியும் முன்பே இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் இறுதி முடிவுக்கு வந்துவிட்டது. அப்படிபட்ட பொலிஸாரின் விசாரணையை எப்படி ஏற்கமுடியும்?

இது தொடர்பாக பக்கச்சார்பற்ற முறையில் விசாரணை நடத்த அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச பொலிஸார் இலங்கைக்கு அழைக்கப்பட வேண்டும் - என்றார். (அ-சி)

## அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்த்துத் தெரிவித்தனர்.

பொதுவாக புதியவர் ஒருவர் எம். பியாகச் சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்புதான் எம்.பிக்கள் கைலாகுகொடுத்து வாழ்த்துக்களைத் தெரிவிப்பர்.

ஆனால், முரளிதரன் சத்தியபிரமாணம் செய்வதற்கு முன்பே அமைச்சர்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக முண்டியடித்துக்கொண்டு சென்று கைலாகு கொடுத்து அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

எதிர்க்கட்சியைப் பொறுத்தவரை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மாத்திரம் கருணாவைப் பார்த்துச் சிரித்தார். அவரும் பதிலுக்குச் சிரித்தார்.

சபாநாயகர் சபைக்குள் நுழைந்ததும் அவர் முன்பாக சத்தியப் பிரமாணம் செய்வதற்காக ஆசனத்தில் இருந்து எழுந்து சென்ற போது முன் வரிசையில் அமர்ந்திருந்த அமைச்சர்கள் தொடராக கைலாகு கொடுத்து கருணாவை அனுப்பி வைத்தனர்.

சத்தியப்பிரமாணம் முடிந்ததும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கீழே இறங்கிவந்து கருணாவைக் கட்டி அணைத்து முத்தமிட்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அதன்பின் கருணா பின் வரிசை ஆசனத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு பசில் ராஜபக்ஷவின் ஆசனத்தில் உட்காரவைக்கப்பட்டார். அப்போதும் கூட வாழ்த்துக்களும் கட்டிஅணைத்தல்களும் ஓயவில்லை.

இச்சந்தர்ப்பத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் மற்றும் மட்டக்களப்பு மேயர் சிவகீதா ஆகியோரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களும் நாடாளுமன்றுக்குவருகை தந்திருந்தனர்.

பாக்யா
இசைப்பயிலகம்
மணியர்பதி வீதி
கொக்குவில் மேற்கு
விஜயதசமி அன்று
இசை, இசைவாத்திய வகுப்புக்கள் ஆரம்பம்
நேரம்: மாலை 3.00 மணி
மிருதங்கம், ஓகன், சித்திரம், வாய்ப்பாட்டும் பண்ணிசையும்
பாக்யா காகிதாதிகள்
121, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்
தொலைபேசி
060 221 8382

மாபெரும் மலிவு விலையில்
தீபாவளி வாழ்த்துக்கள்
விற்பனையாகின்றன

| | | |
|---|---|---|
| ★ போஸ்காட் | - சினிமா | -150.00 |
| ★ போஸ்காட் | - சீனறி | -200.00 |
| ★ போஸ்காட் | - சுவாமி | -200.00 |
| ★ போஸ்காட் | - சினிமா | -300.00 |
| ★ போஸ்காட் | - சினிமா | -400.00 |
| ★ இருமடிப்பு - சிறியது | - சினிமா | -1500.00 |
| ★ இருமடிப்பு - சிறியது | - சுவாமி | -1500.00 |
| ★ இருமடிப்பு - சிறியது | - சீனறி | -1500.00 |
| ★ இருமடிப்பு - பெரியது | -சினிமா | -2000.00 |
| ★ இருமடிப்பு- பெரியது | - சுவாமி | -2000.00 |
| ★ இருமடிப்பு - பெரியது | - சீனறி | -2000.00 |
| ★ கட்டிங் - சிறியது | - சீனறி | -2000.00 |
| ★ கட்டிங் - பெரியது | - சீனறி | -4000.00 |
| ★ கட்டிங் - பெரியது | - சுவாமி | -6000.00 |
| ★ கட்டிங் - (இந்தியா) | - சினிமா | -5000.00 |
| ★ கட்டிங் - (இந்தியா) | - சினிமா | -6000.00 |
| ★ கட்டிங் - (இந்தியா) | - சீனறி | - 8000.00 |

எமது நல்லூர் உற்சவ கால விற்பனை நிலையம் யாழ். பஸ் நிலையத்திற்கு முன்பாக 165, மின்சார நிலைய வீதியில் அமைந்திருக்கிறது என்பதனை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துகிறோம்.
தொ.பேசி- 021 222 2422
பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல, 04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
T.P 021 222 6693

324, Palaly Road, Jaffna. ➤MCSE 2008
சர்வதேச தொழிற்சந்தையில் அதிக வாய்ப்புக்களை கொண்டுள்ள
தகவல் தொழில்நுட்ப கணினிப்பொறியியலாளர் தகைமை நெறி
Networking
Microsoft
Certified System Engineer
MCSE 2008
நிறுவனத்தின் சர்வதேச தர சான்றிதழ்
MCSE 2008
★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gates வழங்கும் சான்றிதழ்
★ Network Manager, System Administrator தொழில் வாய்ப்புக்கள்
★ சான்றிதழ் மூலம் வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
50% கற்கை கட்டண சலுகை
MCSE
நீங்களும் குறுகிய காலத்தில் சர்வதேச தர கணனி விற்பன்னராகலாம்.
மேலதிக விபரங்களிற்கு ➔▶▶ MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Supported by United Nation Development Project/Jaffna Re...

விஜயதசமி அன்று
பாடசாலை மாணவர்களுக்கான
பயிற்சிநெறிகள் ஆரம்பம்
Kids Programming (Year1-10)
Microsoft Office, Hardware
DTP, Internet E-mail,
இப்பிரிவில் இணையும் மாணவர்களுக்கு
விசேட கட்டணச்சலுகை வழங்கப்படும்
Start on: 09.10.2008
Softview Computer College
55, Arasady Rd, Jaffna.
T.P: 021 2225170

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org